# தென்மொழி

## பாவேந்தர் பதிகம்!

மூவேந்தர் எல்லாரும்
மீண்டும் பிறப்பெடுத்துப்
பூவேந்த ராய்ஆட்சி
பூண்டாலும்—பாவேந்தே!
உன்போல் புகழ்பெறவும்
ஒல்லுமோ? ஒண்டமிழில்
மின்போல் கதிர்போல்
மிளிர்ந்து!

புலக்கிழவர் எல்லாரும்
பூந்தமிழில் நல்ல
இலக்கியம் அன்றே முன்
ஈந்தார்!—கலைக்கோவே!
நீயன்றோ பெய்தாய்
இலக்கியத்தில் செந்தமிழைத்
தாயீன்ற வகையாகத்
தந்து!

(தொடர்ச்சி உள்ளே முதல் பக்கம்)

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

சுவடி : 25
ஓலை : 8

விலை:
உருபா: 2-00

# நமக்கு வந்த மடல்கள்.

○ : *1409:* பாவலரேறு ஐயா! சட்டப் பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன் இல்லத் திருமண விழாவில் தலைமையேற்று வாழ்த்துரை வழங்கிய தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் தனித்தமிழ் பற்றிக் கிண்டல் செய்தது, தனித்தமிழின் பால் அவருக்குள்ள வெறுப்பைக்காட்டவா? அல்லது திரு. தமிழ்க்குடிமகன் அவர்களை வெறுப்பேற்றவா? பின்னது என்றால் கவலைப்பட ஏதுமில்லை; முன்னது என்றால் அவர்க்கும், அவர் சார்ந்த என் போன்ற இயக்கத் தோழர்களுக்கும் பெரிய இரண்டகமே (துரோகமே). அண்மைக்கால நடவடிக்கைகள் பல கலைஞர் அவர்களின் தடுமாற்றத்தை உறுதி செய்வதோடு, உண்மையான கட்சித் தோழர்களிடத்தில் மனத்துயரத்தையே உருவாக்கியுள்ளன. தனித் தமிழில் திரு. தமிழ்க் குடிமகன் வேண்டுமானால் தடுமாறலாம்; தென்மொழி என்றுமே தடுமாறவில்லை என்பதைக் கலைஞர் ஏனோ கண்டு கொள்ளவில்லை. தமிழன் ஆட்சியில், தனித்தமிழ் படும் பாடு தெரிந்து வெட்கப்பட வேண்டியவர் அதன் தலைவரே! அன்புள்ள, —மணிவண்ணன், மதுரை-16.

(ஆசிரியர் குறிப்பு: இக்கருத்துத் தொடர்பான ஆசிரியர் கருத்துரையை, அருள்கனிந்து தமிழ்நிலம் இதழ் எண் 137-இல் பார்த்து மேலும் விளக்கம் பெறலாம்)

○ : *1410 :* பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அவர்களுக்கு! தங்களுக்குப் பணிவான என் வணக்கங்கள். தங்களுக்குச் சென்ற திங்கள் பிறந்தநாள் என்பதைத் தென்மொழி (சுவடி:25: ஓலை - 7) வாயிலாக அறிந்தேன். நான் தங்களை வாழ்த்துமளவுக்குப் பெரியவனல்லன். ஆயினும் தாங்கள் நல்ல உடல் நலமும் நீண்ட வாணாளும் அமையப் பெற்று இன, மொழி, நாட்டுநலப் பணிகளுக்குத் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும் என்ற என் உளம் நிறைந்த அன்பான விழைவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தென்மொழி'யைத் தொடர்ந்து திங்கள்தோறும் படித்துவருகிறேன். என்னுடைய கடுமையான பொருளியல் சிக்கலினால் 'தென்மொழி' வளர்ச்சிக்கு நன்கொடை அளிக்கவோ தாங்கள் கூறியுள்ளவாறு அப்பாத்துரையார் குடும்பத்திற்கு உதவவோ இயலவில்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மே-1990 மாத இறுதிக்குள் கண்டிப்பாக மேற்காணும் இரண்டிற்கும் பணம் விடுத்து விடுகிறேன். திரு. பொழிலன் அண்ணா அவர்களும் சிறையிலிருந்து வந்துவிட்டதாக என் நண்பர்கள் கூறக் கேட்டு மகிழ்ந்தேன்.

—கோ. இரவிச்சந்திரன், சென்னை-24

○ : *1411:* என் அரும்பெறல் ஆசிரியரீர் வணக்கம், தலைநகர்த்தமிழ்ச் சங்கம் 27—3—90 அன்று தங்கள் தலைமையில் நடத்திய தொலைக்காட்சி ஊர்வலம் சிறப்பாக அமைந்தது. இந்நிகழ்ச்சி முழு வெற்றி பெற்றதை நினைக்கப் பெருமை. இந்நிகழ்ச்சியிலிருந்து ஒரு பேருண்மை புலப்பட்டிருக்கின்றது.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

(அட்டைப் பக்கத் தொடர்ச்சி)

'நல்லுயிரும் நல்லுடம்பும் நற்றமிழும் 'நான்'—என்று
சொல்லியன்றோ நீஉயிர்த்தாய், சோர்வின்றி!—வல்லியனே!
செந்தமிழை உள்ளுயிராய்ச் செப்பியதார் உன்போல?
வெந்தீண்டு வாழ்வர்,(அ)தை விற்று!

இனிமைத் தமிழில் எளியசொல் கூட்டித்
தனிமைச் செந்தமிழ்ப் பா தந்தாய்!—பனிமலரே!
உள்ளம் குளிர்வதுபோல் ஒண்டமிழை வாழ்வித்தாய்!
கள்ளம் கவடின்றிக் காத்து!

தொழிலா ளர்உயரத் தோள்தந்தாய்! அன்னார்க்(கு)
எழிலார் இலக்கியமும் ஈந்தாய்!—பொழில் ஆரும்
தென்றலுலா வந்ததுபோல் திங்கள்வான் நீந்துதல்போல்
என்றென்றும் வாழ்வாய் இருந்து!

பாவியமும் நாடகமும் பாடல் பலநூறும்
ஆவியுமாய்ச் செந்தமிழாய் ஆர்ந்து,வண்ண—ஓவியமாய்த்
தந்தாய்! ஒளிர்ந்தாய்! தமிழ்மொழிக்குத் தந்தைபோல்,
எந்தாய் போல்—என்றும் இரு!

எந்தமிழுக் கேற்றம் இனத்துக்கு மீட்சிதரச்
சொந்தநலம் எண்ணுமல் சோர்வின்றித்—தந்தபெரும்
நல்ல இலக்கியங்கள் நந்தமிழர் வாழ்வுயர்த்தும்;
வெல்லும்; பகைக்கெறிந்த வேல்!

செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
வெந்தணல் ஒன்று விரைந்ததென—முந்தியே
பின் விளைவாக் கூறினை, பெரும்புரட்சிப் பாவேந்தே!
இன்விளைவாக் கண்டோமே இன்று!

தந்தை பெரியார் தணல்கருத்தைப் பாவடிவில்
முந்தை நறுந்தமிழில் மூட்டுவித்தாய்!—சிந்தை
கனல்பற்றும்! செந்தமிழர் காட்டுத் தீயாய்க்கனல!
அனல்பற்றும் பார், பகைமேல் ஆர்ந்து!

திருவள்ளு வர்க்குப்பின் தீந்தமிழின் மக்கள்
ஒருவல் லினமாய் உணர்ந்து—பெருவலிவு
கொள்ளுதற்குப் பாவேந்தே நீகொண்ட கொள்கையிலே
எள்ளுதற்கிங் கேதோர் இடம்?

சிறப்புமடல்:

# ஒரு மலேசிய மடல்!

(ஆசிரியர் குறிப்பு: திருக்குறள் மணி: புலவர். இறைக்குருவனார் அண்மையில் மலேசியா சென்றார். அவர் ஆசிரியர்க்கு எழுதிய மடல் இது. இதில் இக்கால் அங்குள்ள தமிழர்களின் பொது நிலை விளக்கப் பெறுகிறது. அன்பர்கள் அவற்றை அறியும் பொருட்டு மடல் இங்கே வெளியிடப் பெறுகிறது.)

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய ஐய!

வணக்கம்! நலம்; திருவருளால் நலமே சூழ இறைஞ்சுகிறேன். அங்குத் தாங்களும், பிறரும் நலமாக இருப்பது பற்றி அறியும் விழைவுடையேன். என் முன்னைய மடல் கிடைத்திருக்கும்.

இப்பொழுதெல்லாம் பெரும்பாலும் நாள்தோறும் நிகழ்ச்சி உள்ளது. கம்பாரில் கனிமொழி இல்லத்தில் தங்கிக் கொண்டு ஆங்காங்குப் பல்வேறு நிகழ்ச்சிகளுக்குப் போய் வருகிறேன். திரு. கனிமொழி சொந்தமாக மூடுந்து வைத்துள்ளமையால் அதிலேயே அவரும் அவர் துணைவியார் திருமேனியம்மையாரும் நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் சென்று வருகின்றனர்.

பெரும்பாலான இடங்களில் 'இங்கு ஐயா (பாவலரேறு) வந்திருந்தார்; இந்து சங்க(மத)த்திற்குச் சரியான அடிகொடுத்தார்; 3 மணி நேரம் 3-30 மணி நேரம் பேசினார்' என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆகையால் யான் 1-30 மணி நேரம் 2 மணி நேரம் பேசினாலும் பொறுமையாகவும் ஆர்வமாகவும் கேட்கின்றனர். 1 மணி நேரத்திற்குமேல் பேசக்கூடாது என்று வைத்திருக்கிறேன். ஆனாலும் 1-30 மணி நேரம் 2 மணி நேரம் என நீண்டு விடுகிறது. இங்குக் கூட்டங்களில் அதிகம் பேர் பேசுவதில்லை யாதலால் பேச்சு நீண்டாலும் தெரிவதில்லை.

பெரும்பாலும் மொழியறிவு, தமிழ்நலம், சாதிச்சழக்குகள்-சமயக்குழப்படிகள், திருக்குறள், கழக இலக்கியங்கள், தமிழினவீழ்ச்சி, மறைமலையடிகளார், பெரியார், பாவாணர், பாவேந்தர் தொடர்பான பேச்சுகளே.

இங்கு 'இந்து சங்கம்' பரவலாக எழுச்சி பெற்று வருகின்றதென்று தெரிகிறது. இசுலாமியர்களின் மதமாற்ற முயற்சி அதிகரித்து வருவதாகவும், அதிலிருந்து தப்பவும், அதைத் தடுக்கவும் விழையும் தமிழர்களை இந்து சங்கம் ஈர்ப்பதாகவும் அறிய முடிகிறது. திராவிடர் கழகத்தினர் இறைமறுப்புக் கொள்கைக்கு அழுத்தம் கொடுப்பதும், இந்துமத இழிவுகளை மட்டுமே சுட்டிக் காட்டித் திட்டித் தீர்ப்பதும் இசுலாமியர்களின் மதமாற்றத்திற்கு மறைமுகமான ஆக்கங்களாக அமைகின்றன என்று கருதுவதால், தமிழ்மக்கள் தாய்மொழியுணர்வு, இனவுணர்வு இருந்தாலும்கூட, அவற்றையும் புறக்கணித்தும் இந்து சங்கத்தில் இணைகின்றனர். தமிழுணர்வு, இனவுணர்வு இல்லாதவர்கள் அதில் இணைவதுபற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)



“கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;” எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே

( திருவளம் தி. பி. 1990 (1959) )



# தென்மொழி

மொழி—இனம்—நாடு.

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை-முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி: 847829)

சுவடி: 25] உ0உக மீனம்' (மார்-ஏப். 90') [ஓலை:8

# பாவேந்தர் நூற்றாண்டு!



இவ் விருபதாம் நூற்றாண்டு, தமிழ்மொழியின்—தமிழினத்தின்—மறுமலர்ச்சிக் காலம் என்று சொன்னால் மிகையாகாது; தவறும் ஆகாது. இந் நூற்றாண்டுத் தொடக்கத்தில்-தான் திராவிட இயக்கவுணர்வின் கீழ்வான விடியல் வெளிச்சம் கொஞ்சம் கொஞ்ச-மாகப் புலர்வாங்கத் தொடங்கியது. அந்த விடியல் வெளிச்-சத்தின் பல்வேறு வகையான ஒளிக்கற்றைகளில் ஒன்றுதான் பாவேந்தர் பாரதிதாசன் என்னும் தமிழ் ஒளிக்கற்றை! அவ்—வொளிக்கற்றை பாய்ச்சிய இனவுணர்வுக் கனல்தான், தமிழ்த்-தென்றலைப் புரட்சிப் புயலாக வேகமெடுத்து வீசச் செய்தது. ஆம், தென்பொதிகைத் தென்றல் போல் அமைந்து தவழ்ந்த தீந்தமிழ் இலக்கியம், பாவேந்தரின் பகுத்தறிவுப் புலமை தோய்ந்து, மொழியுணர்வுப் புயலாக வளர்ந்து, இன நலச்-சூறாவளியாக மாறி வீசத் தொடங்கியது;

பாவேந்தரின் தோற்றம் என்னும் தமிழ் இலக்கியச் சிவப்புக் கதிரவன் எழுச்சி நிகழ்ந்து, 1990 ஏப்பிரல் 29-உடன்

தொண்ணூற்றொன்பது ஆண்டுகள் முடிந்து, நூறாவது ஆண்டு தொடங்குகிறது. இவ் வாண்டு முழுவதும் அவரின் நூறாவது ஆண்டின் விழவு நறுமணம் கமழ்ந்து கொண்டே இருக்கும்! கலைஞரின் தமிழக அரசும், பாவேந்தர் பாரதிதாசன் பல்கலைக் கழகமும், மற்ற பொதுமன்றங்களும், தமிழ் இலக்கிய அமைப்புகளும் இந்த ஆண்டு முழுவதும் பாவேந்தர்க்கு விழவும் நிகழ்வும் நடத்திக் கொண்டே இருக்கும்.

இது தொடர்பாக அரசு செய்யவிருக்கும் பணிகள் மிகுதியாகவும், பயனுடையனவாகவும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். வெறும் விளம்பரத்தனமான விழாக்களால் ஏதும் பயன் விளையப் போவதில்லை என்பதை அனைவரும் உணர்ந்து கொள்வது நல்லது. தமிழர்கள் எப்பொழுதும் அறிஞர்களின் மறைவுக்குப் பின்னர்தாம் அவர்களைப் பாராட்டுகிறார்கள், பெருமைப்படுத்துகிறார்கள்; புகழ்கிறார்கள்; அவர்களின் வாழ்வியல் பயன்களை உணர்கிறார்கள். இம் மனநிலை, ஏனோ இவ் வறிவியல் வளர்ச்சிக் காலத்தில்கூட இன்னும் சீரடையாமல் இருப்பது பெரிதும் வருந்தத் தக்கதாக உள்ளது. இதற்கு அடிப்படையான காரணம், நம்மவர்கள் (தமிழர்கள்) அறிவில் வளர்ச்சி பெற்ற அளவிற்கு, மனநிலையில் வளர்ச்சி பெறாமலிருப்பதுதான். இவர்களிடம் பிற இனத்தவர்களை விடப் பொறாமையுணர்வு, கீழறுப்புத் தன்மை, தன்னினத்தையே வெறுத்தல், பிற இனங்களுக்கு அடிமையாகவிருந்து, அவற்றிற்குக் கட்டை தேய உழைத்தல்—ஆகியன மிகுதியாக இருக்கின்றன. அத்துடன் போதிய பொதுவுணர்வு, தம்மைப் போல் பிறரையும் ஒப்பக் கருதும் ஒப்புரவு, நல்லவற்றைப் போற்றிப் புரந்து கொள்ளும் தன்மை, நடுநிலை உணர்வு-மனப் பண்பாட்டியல் கூறுகள் வளர்ச்சியடையாமல் உள்ளன. இவற்றுடன் சாதி, மத உணர்வுகளும், அரசியல், கட்சி உணர்வுகளும், அறிவுத் தகுதியினும் மேம்பட்ட அளவில் மதிக்கப் பெறுவதும் ஒரு தலையாய காரணமாகும். தன் சாதியையும், தன் மதத்தையும், தன் கட்சியையும், சேர்ந்த அறிஞர் ஒருவரே, பிறர் யாவரினும் அதிகமாக மதிக்கப் பெறுவதை நாம் பார்க்கிறோம்.

நூற்றாண்டு விழா கொண்டாடப்பெறும் பாவேந்தர் நிலையிலும் கூட, அவர் உயிரோடிருந்த பொழுதும், அவரின் இறுதிக் காலத்தில் தமிழகத் தலைநகராகிய இதே சென்னையில், ஆதரிப்பார் இன்றி அவர் வறுமையில் வாடிச் செத்த பொழுதும், அவரின் அறிவுத் தகுதி நோக்கியோ, பாப்புலமை கருதியோ, இக்கால் அரசுக் கட்டிலில் இருக்கும் எவருமே அவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அது பொழுது தந்தை பெரியார் கூட அவரின் மருத்துவச் செலவிற்காக, ஒரு கணிசமான தொகையை ஈடு செய்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறோம்,

ஆனால், இன்று அவர் நூற்றாண்டு விழாவை, அவரை உணர்ந்தவர், உணராதவர், அறிந்தவர், அறியாதவர், தெரிந்-

தவர், தெரியாதவர், விரும்பியவர், விரும்பாதவர், தொடர்புள்ளவர், தொடர்பில்லாதவர்—இன்னோரன்னர் அனைவரும் கொண்டாடத் தொடங்கியிருக்கின்றனர். அவ்வகையில் பாவேந்தர் பெயரைச் சொல்லியாகிலும், தத்தம் பெயர்களை விளம்பரப் படுத்திக் கொள்ளலாம் என்பதில் வேட்கையோ, விருப்பமோ, வெறியோ சிலர் பலரிடம் மண்டிக் கிடப்பதைப் பார்க்கின்றோம். இவ் வகையில் அவரை நினைத்தாகிலும், சொல்லியாகிலும், தாங்கள் தமிழர் என்பதை இவர்கள் நினைவு கூர முன்வருவது நமக்கு ஒருவகையில் மகிழ்வளிக்கிறது என்றாலும், இவர்களின் போலிமைப் பற்றும், ஆரவார உணர்வும், விளம்பர அங்காப்பும் நமக்கு வேறு வகையில் வருத்தத்தையும் வெறுப்பையுமே தருகின்றன.

இவ் விடத்தில் பாவேந்தர் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் நாமும் சரி, அரசும் சரி, ஒன்றை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பாவேந்தர் என்பவர் தமிழின வரலாற்றின் ஒரு திருப்புமுனை. தமிழுணர்வும், தமிழின உணர்வும், தமிழ் நாட்டு உணர்வும் அற்றுக்கிடந்த தமிழ் இலக்கியப் புலவர்களிடையில் அவற்றை எண்ணிப் பார்க்கவும் அவர்கள் உள்ளங்களில் அவை ஆழப் பதியுமாறும் செய்தவர் பாவேந்தர் எனில் அது மிகையாகாது. தந்தை பெரியார் தமிழ் மக்களிடையில் ஒரு விழிப்புணர்வையும், பகுத்தறிவுணர்வையும், தன்மான உணர்வையும், தமிழ் நாட்டுணர்வையும் ஊட்டினார் எனில், பாவேந்தர் அவ் வுணர்வுகளுடன் தமிழின மீட்சிக்கு அடிப்படையான தமிழுணர்வையும், தமிழினவுணர்வையும் கொளுத்தியவர். இதை வரலாறு என்றென்றும் நினைவு கூரும். இவை நிற்க.

பாவேந்தர் நூற்றாண்டை நம் தமிழக அரசும் அவர் பெயரால் திருச்சியில் இயங்கும் பல்கலைக் கழகமும் தனித்தனியாகவும் இணைந்தும், பல வகையாகவும் சிறப்பாகவும் ஆண்டு முழுவதும் கொண்டாடத் திட்டமிட்டுள்ள செய்தி தமிழர் அனைவர்க்கும் மகிழ்ச்சி தருவதாகும். பாவேந்தர் பாரதிதாசனைக் கொண்டாடுவதற்கும் பாராட்டுவதற்கும் தமிழர்களே வெகுவாக முன்வருவதில்லை. தமிழர்களில் பலரும் அவரை அறியார். காரணம் தமிழுக்கும், தமிழினத்திற்கும், தமிழ்நாட்டு உரிமைக்கும் குரல் கொடுத்த முதல் பாவலர் ஆகையால் அவரைப் பார்ப்பனர்கள் அனைவரும் வெறுத்தார்கள். எனவே, அவரைப் பொது மக்கள் பேரளவில் அறிந்து கொள்ளாதவாறு திட்டமிட்டு மறைத்தார்கள். அவர்களிடம்தாம் பெரும்பாலான விளம்பரக் கருவிகளும் ஆட்சி அதிகாரங்களும் இருக்கும். தமிழரில் ஒருவர் எத்துணை பெரிய அறிஞராகவோ, கலைஞராகவோ, பொது மக்கள் தலைவராகவோ, அல்லது வேறு எத்தகைய சிறப்பு மிக்கவராகவோ இருந்தாலும்கூட, பார்ப்பனர்கள் ஒரு சிறு அளவிலாகிலும் அவரைப் பாராட்டிக் கொள்வதில்லை. இன்னும் சொன்னால் அவர்கள் இனத்திலேயே கூட அவ்வாறு தமிழுக்கு உழைத்தவர்களை அவர்கள் மிகுதியாகக் கண்டு கொள்வதில்லை. அஃது அவர்-

களின் இயல்பு; பிறவிக் குணம். ஏனெனில் தமிழ் வளர்ச்சி பெறு-வது, அதிலும் தூயதமிழ் வளர்ச்சி பெறுவது என்பது, அவர்-களுக்குப் பிடிக்காதது; அவர்கள் அதை விரும்புவதில்லை. அதற்குக் காரணம் தமிழ் வளர்ந்தால் சமசுக்கிருதம் மதிப்பிழந்து போகும்; அதைத் தொடர்ந்து பார்ப்பனர்களின் புராண, இதிகாசப் புரட்டுகளும் மதிக்கப் பெற மாட்டா. மொத்தத்தில் அவர்களின் வேதமாகிய இந்து மதக் கோட்பாடுகளே ஆட்டம் கண்டுவிடும் என்பது அவர்களுக்குள்ள அச்சம். அஃது உண்மையும் கூட. அவ்-வாறு நிகழுமானால், அவர்களுக்கு அரசியலிலும், குமுகாயத்திலும் இருக்கின்ற பெருமையும் சாய்காலும் வல்லாண்மையும், மிக விரைவில் கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி, அதுவும் தேய்ந்து சிற்றெறும்பாகி, இறுதியில் அதுவும் தேய்ந்து ஒன்று மில்லாமற் போவது போல், ஆகிவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் தமிழ்மொழிக்கும் தமிழினத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் உழைப்பவர்களை அவர்களுக்குப் பிடிப்ப-தில்லை. மேலும் பாவேந்தர் தமிழர். தமிழர்களில் மூல அறிஞரோ, கலைஞரோ, புலவரோ, தோன்றுவதை அல்லது வளர்வதை அவர்கள் மறைமுகமாக வேனும் மட்டந்தட்டுவார்கள். பகவத் கீதையைப் போற்றும் அளவுக்குத் திருக்குறளை அவர்களுக்குப் பிடிக்காது. கீதைப் பேருரை நிகழ்த்துபவர்கள் பார்ப்பனர்களில் பலர் இருக்கிறார்கள். ஆனால், திருக்குறள் உரை செய்வதற்கு அவர்களில் ஒருவரும் முன்வருவதில்லை. இனி, திருக்குறளையாகி-லும் ஏதோ ஒரு நன்மை கருதி அங்கொன்றும், இங்கொன்றும் எடுத்துக் காட்டாகச் சொல்லுவார்கள்; பெருமையாகக் கூடக் குறிப்பிடுவார்கள். திருவள்ளுவரை அவர்கள் வாயாலும் எழுத்-தாலும் போற்றிப் பாராட்டி உரைக்க மாட்டார்கள். இவற்றை நாம் உண்மையின் அடிப்படையாகக் கூறுகின்றோமேயன்றி, அவர்கள் மேல் உள்ள வெறுப்பின் அடிப்படையில் கூறவில்லை.

(தொடரும்)

---

## இலக்கணக்கடல் தண்டபாணியார் மறைவு!

முத்தமிழ் இலக்கணக் கடலை முழுகிக் கரை கண்டவரும், 'திருக்குறள் உரைவளம்' என்னும் அரிய ஆய்வு உரைத் தொகுதியைப் பதிப்பித்தவரும், பேராசிரியர் உ.வே.சாமிநாதரின் பெருமை மிகு மாணவருள் எஞ்சியிருந்தவரும், திருவாவடுதுறை, தருமபுரம் ஆகிய சைவத்திருமடங்களின் அவைப் புலவரும், 'திருமந்திரம்' 'திருவாசகம்' இவற்றின் உரையாசிரியரும், நம் மேல் மிகுந்த அன்பும் மதிப்பும், நம் 'தென்மொழி' மேல் தூய அன்பும் அக்கறையும் கொண்டவரும், இந்திய அரசின் 'தாமரைத் திரு' (பத்மபூஷண்) பட்டம் பெற்ற ஒரே தமிழறிஞரும் ஆகிய பெரும் புலவர் பெருந்தகை ச. தண்டபாணி ஆசான் (தேசிகர்) அண்மையில் மறைந்தது குறித்து நாம் ஆற்றொணாத்துயரம் எய்தி-னோம். அவ் வரும் பெறல் அறிஞர் குடும்பத்தாருக்கு நம் இரங்-கலையும் வருத்தத்தையும் கூறிக் கொள்கிறோம். —ஆசிரியர்.

# அப்பாத்துரையார் குடும்ப நலக் கொடை!

## பட்டியல்-2

### ஆசிரியரின் அன்பு வேண்டுகோளுக்கு இசைந்து பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் அவர்களின் குடும்பத்துக்கு உதவிய தூய தமிழ் நன்னெஞ்சங்கள்:

*(16-3-90 முதல் 24-4-90 முடிய)*

| | | உருபா |
|---|---|---|
| 29 | இரா. வேல்முருகன், தச்சநல்லூர் | 25 |
| 30 | இரா. தமிழ்க்கதிர், திருக்கழுக்குன்றம் | 50 |
| 31 | சி. இராமச்சந்திரன், கரூர் | 100 |
| 32 | ச. வே. சுப்பிரமணியன், திருச்சி | 60 |
| 33 | தவத்திரு. பாலசுப்பிரமணியன், திருச்சி | 25 |

கி. பெருமாள் ஆசிரியர், கீரனூர் அவர்கள் திரட்டி விடுத்த தொகை விளக்கம் :

| | | |
|---|---|---|
| 34 | கி. பெருமாள், ஆசிரியர் வடக்குப்பட்டி | 5 |
| 35 | சா. தோ. அந்தோணிசாமி, ஆசிரியர், ஆம்பூர்ப்பட்டி | 5 |
| 36 | பொ. பழனியப்பன், ஆசிரியர், சாத்திவயல் | 5 |
| 37 | பி. மாரிமுத்து, ஆசிரியர், விளாப்பட்டி | 5 |
| 38 | பெ. மலையாண்டி, ஆசிரியர், சூரியூர் | 5 |
| 39 | இர. தேவராசன், ஆசிரியர், மலம்பட்டி | 5 |
| 40 | அர. சீனுவாசன், ஆசிரியர், நீர்ப்பழனி | 5 |
| 41 | அ. அரசு, ஆசிரியர், பிச்சைத்தேவன்பட்டி | 5 |
| 42 | அ. இலாரன்சு, ஆசிரியர், மலம்பட்டி | 5 |
| 43 | டி. சைமன்ராசு, ஆசிரியர், கோங்குடிப்பட்டி | 5 |
| 44 | ப. கனகராசு, ஆசிரியர், மாங்குடி | 5 |
| 45 | ஐ. சான் சாமுவேல், ஆசிரியர், கோட்டைக்காரன்பட்டி | 5 |
| 46 | த. பாபுபவுல்ராசு, ஆசிரியர், பாக்குடி | 5 |
| 47 | இரவிக்குமார், ஆசிரியர், கோட்டைக்காரன்பட்டி | 5 |
| 48 | இரா. மாரியப்பன், ஆசிரியர், தன்னுங்குடி | 5 |
| 49 | அசு. அரத்தினம், ஆசிரியர், பேராம்பூர் | 5 |
| 50 | ஆர். வேல்சாமி, ஆசிரியர், பேராம்பூர் | 5 |
| 51 | எ. வின்சென்ட் ஆரோக்கியசாமி, ஆசிரியர், பேராம்பூர் | 5 |
| 52 | டி. வில்லியம் துரைராசு, ஆசிரியர், நரியப்பட்டி | 5 |
| 53 | வீ. தங்கையன், ஆசிரியர், நரியப்பட்டி | 5 |
| 54 | அ. இராசலக்குமி, ஆசிரியை, மதயானைப்பட்டி | 5 |
| 55 | ஆ. மஞ்சுளா, ஆசிரியை, சாத்திவயல் | 5 |

(தொடர்ச்சி 31-ஆம் பக்கம்)

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)
பாலான பெண்களின் வாழ்க்கை வீணாகிறது என்பதை அறியும் போது-உணரும்போது-மனம்பெருமளவில் நொந்துதுன்புறுகிறது.

போராட்டத்தின் தாக்கங்கள் ஒரு தலைமுறை மக்களை மனத்-தாக்கத்திற்கு — உளவியல் முறையில் பெரும் துன்பத்திற்கு ஆளாக்கி இருக்கிறது — ஆளாகி இருக்கிறார்கள் என்றால் மிகையில்லை. போராட்டம் நடைபெறும் நாடுகளில் பொருளியல் வீழ்ச்சி காரணமாகப் 'பண மதிப்பு சரிவதால்' இந்தக்குறைந்த ஊதியம் அவர்களுக்குப் போதுமானதாக இருக்கிறது.

நமக்குச் சம்பளம் இந்தியாவிலும் இங்கும் ஒன்றுதான். எனினும் பண மதிப்பின் வேறுபாடே இந்தியப் பண மதிப்பில் அதிகத் தொகை பெறுவது போன்ற மயக்கத்தைத் தோற்றுவிக்கிறது. (கொஞ்சம்) சிறிது தொகையையே காண முடிகிறது. நமது செலவு போக சேமிக்கும் பணமே நிகர வருமானம். எல்லா வற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால் எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. அதற்கு அங்கேயே இருந்து விடலாம். என்ன செய்வது......?

வங்காளி பாக்கித்தானியர்கள், சூடானி, உகாண்டா நாட்டவர்களைப் போன்று குறைந்த ஊதியத்தில் வேலை செய்ய இந்தியாவில் இருந்து வரும் ஆண்களால் இயலவில்லை. பல்வேறு சிக்கல்கள் குறித்து எழுதவேண்டும் என்று நினைத்தாலும் நேரமின்மையாலும் வாய்ப்பு இன்மையாலும் எழுத இயலவில்லை. (இப்பொழுது நள்ளிரவு மணி 1-25) ஐயா! நிறைய செய்திகளைத் தங்களின் அன்பு மடல்கண்டு எழுதுகிறேன். பிறபின். அன்புடன் உங்கள்:

— சாகிர் உசேன், குவைத்து

---

(2-ஆம் பக்கம் தொடர்ச்சி)
இந்து சங்கத்தில்—இந்துமதத்தில் இருப்பவர்களிடமாவது நாம் மொழியுணர்வு, இனவுணர்வு பற்றிப் பேசலாம், ஏசலாம், வழக்காடலாம்; ஆனால் இசுலாமியர்களாகிவிட்டால் அவர்-களிடம் மொழியுணர்வு, இனவுணர்வு என்றெல்லாம் வாய் திறக்கவே வாய்ப்பிராது என்று நம் அன்பர்களேகூடக் குரலைத் தாழ்த்திக் கொண்டு கூறுகின்றனர்.

இவ்வாற்றால்—இந்து சங்க எழுச்சியால் இங்குத் தமிழுணர்வு மங்கி வருவதாகவே உணர்கிறேன். கடந்த சில ஆண்டுகளுக்கு முன் இருந்த நிலையை விடவும் இப்போது நலிவுற்றிருப்பதாக அன்பர்கள் குறிப்பிடுகின்றனர். திராவிடர் கழகமும் வலிவு-குன்றிய நிலையிலிருப்பதாகவே எண்ண வேண்டியுள்ளது; இவை நிற்க!

இச் சுற்றச்செலவு பொருளியல் வகையில் ஆக்கம் தருவதாக இல்லாவிட்டாலும், ''வாடித் திரிந்து நான் கற்றதும் கேட்டதும் அவலமாய்ப் போதல் நன்றோ?'' என என்னும் நிலையில் சிறுமாற்-றம் ஏற்படுத்தியுள்ளது. மற்றவை நேரில்.

அன்புடன்
கம்பார்,—17-3-90 இறை

# குணாவின் 'ஆசியத்தகவு' (Asiatic Mode)

'ஒரு திறனாய்வு'! வழக்கறிஞர்-சோதிப் பிரகாசம்.

தமிழினத்தின் புலம்பனை(ஆன்மாவை)த் தேடிக் கண்டு பிடிக்கின்ற முயற்சிகளில் பலரும் பலகாலமாக ஈடுபட்டு வந்து இருக்கிறார்கள். அண்மைக் காலமாக, மார்க்கிய ஆய்வாளர்களும் இத்தகு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்ற உண்மையினைக் கிளைஞர் குணாவின் ''ஆசியத்தகவு'' *(Asiatic Mode) என்ற நூல் சுட்டிக் காட்டுகிறது.

''ஆசிய உருவாக்கத் தன்மை (உற்பத்தி விதம்)'' பற்றிய கார்ல் மார்க்சு அவர்களின் கருத்துச் சிதறல்களை ஒட்டியும் வெட்டியும் ''ஆசியத்தகவு'' என்ற தலைப்பில் குணா இந்த நூலை ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். குணாவின் நூலுக்கு முன்னுரை வரைந்திருப்பவர் கிளைஞர் சத்தியமங்கலம் நாகராசன்.

இந்திய ஆத (ஆன்மாவி)னுள் கிறித்தவ ஆத(ஆன்மாவி)னை மிகவும் எளிதாகப் புகுத்திவிட முடியும் என்ற நினைப்பில் இந்தியத் துணைக் கண்டத்தினுள் நுழைந்த ஐரோப்பியர்களுக்கு அன்று ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. இந்திய ஆதன்(ஆன்மா) என்பது வெறும் இந்திய ஆதன் (ஆன்மா) அன்று; மாறாக, ஆரிய-இந்திய ஆதன் (ஆன்மா) என்ற உண்மையினை அவர்கள் காணநேர்ந்த அதிர்ச்சி அது.

எனவே கிறித்தவ ஆதனுக்கு எதிர்ப்புக் காட்டி வந்த ஆரிய-இந்திய ஆதனை அடித்து வீழ்த்திடுக்கின்ற தீவிரமான முயற்சிகளை அவர்கள் மேற்கொள்ள முற்பட்டனர். அதிர்ச்சிமேல் அதிர்ச்சியாக மற்றுமொரு வியப்பு அவர்களுக்குக் காத்திருந்தது. ஆரிய-இந்திய ஆதனுள் பல்வேறு மொழியின மக்களின் ஆதன்கள் அடைபட்டுக் கிடந்த உண்மையினை அவர்கள் காண நேர்ந்த வியப்பு அது.

இறுதியில், ஆரிய-இந்திய ஆதனுக்குள் கிறித்தவ ஆதனைத் திணிக்க முயல்வதைவிட, அடைபட்டுக் கிடந்த ஆதன்களுக்கு அவற்றின் மாயமலத்தில் இருந்து விடுதலை அளித்து, அந்த ஆதன்களினுள் கிறித்தவ ஆதனைப் புகுத்தி விடலாம் என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர்.

---

* இதழ் ஆசிரியர் குறிப்பு: Mode என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு கட்டுரை ஆசிரியர் 'விதம்' என்று மொழி பெயர்த்திருந்தார். விதம் என்னும் வடசொல்லுக்குத் தன்மை, வகை என்னும் சொற்களைப் பொருளாகச் சொல்லலாம்; அவற்றுக்கு நேர் ஆங்கிலச் சொல் Kind என்பது: ஆனால் Mode என்பது ஒரு மரபு வழக்கத்தை, ஒரு தொடர் முறையைச் சுட்டுவது. இப்பொருளை முழுமையாகத் தரும் சொல்லாகத் தகவு என்னும் சொல்லைப் பயன்படுத்துவது சிறப்பாக இருக்கும்.

இத்தகு முயற்சிகள் இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் மேற்கொள்ளப்பட்ட போதுதான், தாழ்ந்து கிடந்த தமிழினம் தனது ஆதனைத் தானே அடையாளம் காணத் தலைப்பட்டது எனலாம்.

தமிழ்நாட்டில் மதம் பரப்பப் புறப்பட்ட ஐரோப்பியர்கள், தமிழினத்தின் ஆதன் (ஆன்மா) அடிமைப்பட்டுக்கிடந்ததற்கு இரண்டு மாயைகள் காரணமாக இருந்ததைக் கண்டனர். ஒன்று, ஆரியர்கள் உயர்ந்தவர்கள், தமிழர்கள்-திராவிடர்கள்-தாழ்ந்தவர்கள் என்ற சாதிமுறையான ஆரியமாயை. இரண்டு, சமசு-கிருதம் தேவமொழி, தமிழ்மொழி இழிந்த (நீச) மொழி, என்ற பண்பாட்டு முறையான ஆரிய மாயை.

மேல் சாதிக்காரர்களை விட்டு விலகி, கீழ்ச்சாதிக்காரர்கள் நடுவில் ஐரோப்பியக் கிறித்தவர்கள் பணியாற்றத் தொடங்கிய-போது, சாதி-முறையான ஆரியமாயை கிழிபடத் தொடங்கியது. தமிழ் இலக்கியங்கள், குறிப்பாக, தமிழினத்தின், ஆதன் (ஆன்மா) எனத் தக்க திருக்குறள் போன்ற நூல்கள் வெளிக் கொணரப்பட்டும் மொழி பெயர்க்கப்பட்டும் வந்தபோது சமசு கிருதம் தேவமொழி என்ற பண்பாட்டு முறையான ஆரியமாயை-யும் கிழிபடத் தொடங்கியது. தமிழினம் தனது ஆதனின் சிறப்-பினைக் கண்டு தானே வியந்து நின்றது எனலாம்.

பின்னர், தமிழினத்தின் பண்பாட்டு இடிபாடுகள் இடையே அகழ்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழறிஞர்களும் இத்தகு அகழ்வு வேலைகளில் ஆர்வமுடன் ஈடுபடத் தொடங்-கினர்.

விளைவாக, ''ஆரியர்கள் எங்கிருந்தோ வந்து இங்கே குடிபுகுந்து விட்ட நாடோடி மக்கள்'' என்ற வரலாற்று உண்மை அகழ்ந்து எடுக்கப்பட்டது, 'தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி' என்ற உண்மையும் நிலைநிறுத்தப்பட்டது. தமிழ்த்தாயின் தோள்கள் புகழ்மாலைகளால் அணி செய்யப்பட்டன.

ஐரோப்பிய வணிகமும் சரக்குப் பொருளடிப்படையின் பெருக்கமும் அவற்றின் ஆழத்திலும் அகலத்திலும் இத்தகு முயற்சிகளின் வெற்றிக்குப் பருமையான அடிப்படைகளாக விளங்கின என்பது யாரும் மறுத்திட முடியாத ஒரு வரலாற்று உண்மை.

இது பொருளியல் தீர்மானப்பாட்டின் பாற்பட்ட வழக்கு (வாதம்) இல்லையா? இதை எதிர்த்துத்தானே, நாகராசனும் குணவும் முன்னுரையும் முகவுரையும் வரைந்திருக்கிறார்கள் என்ற கேள்விகள் இங்கே எழலாம்.

ஆனால். எந்தப் பொருளியல் தீர்மானப்பாட்டு வழக்கிற்கு எதிராகக் குணா தொடக்கத்தில் சில முணுமுணுப்புகளை எழுப்பு-கிறாரோ, அதே பொருளியல் தீர்மானப்பாட்டினை முடிவில் அவரே நிலைநிறுத்தியுமிருக்கிறார். இதில்தான் மார்க்சியத்தின் வலிமையே அடங்கிக்கிடக்கிறது.

ஆதன்(ஆன்மா)என்பது கூட என்ன? பருமை நிலைகளில் ஏற்படுகின்ற அயன்மையான வெளிப்பாடுகளின் காரணமாக, உள்வயமாக ஒடுங்கி நுண்மைப்பட்டுப் போகின்ற இயல்புகள் தாமே, உள்ளுயிர்ப்புகள்(ஆன்மாக்கள்)! பருமை நிலைகளின் வளர்ச்சிக்கு ஏற்ப ஆதன்(ஆன்மாக்)களும் வளர்ந்து சிறந்து பரமாதனாகி, அயன்மைப்பாட்டின் நுண்மைப்பாட்டில் நின்று விடுதலை பெற்று, இறுதியில் மனித இயல்பாகத் திண்மைப்படு-கின்றன எனலாம்.

தமிழர் பண்பாட்டின் சிறப்புகளை அகழ்ந்து எடுக்கின்ற பணி-களைத் தொடங்கி வைத்தவர்களில் பெஸ்கி என்ற வீரமா-முனிவர், ஜி. யு. போப், கால்டுவெல் போன்ற ஐரோப்பியர்களை முகாமையானவர்களாகக் குறிப்பிடலாம்.

வ.உ. சிதம்பரனார், கா. சுப்பிரமணியனார், மறைமலையடிகள், திரு. வி. க. , யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், கதிரைவேலனார், தாமோதரனார், சுவாமி ஞானப்பிரகாசர், நீலகண்டனார், சீனிவாசனார், மு. இராகவனார், இரா. இராகவனார் வி. கோ. சூரிய நாராயணனார். உ. வே. சாமிநாதர், மா. இராசமாணிக்கனார். சோமசுந்தர பாரதியார்; மயிலை சீனி வேங்கடசாமி, தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், கா. அப்பாத்துரையார் ஆகியோர் தமிழ்ப் பண்பாட்டினுள் ஆய்வுகளை மேற்கொண்ட தமிழறிஞர்களில் முகாமையானவர்கள்.

தமது ஒப்பிலக்கணத்தின் மூலம் கால்டுவெல் சமசுக்கிருதத்-திற்குச் சாவுமணி அடித்தார் என்றால், தேவநேயப் பாவாணர் அதற்குக் கல்லறை கட்டினார் என்று கூறலாம். பெருஞ்சித்திரனார் போன்றவர்கள் அந்தக் கல்லறையின் மீது இறுதியான இறப்பு வரி (மரண வாசகம்)களை எழுதிக் கொண்டு வருகிறார்கள்.

இப்படி, வரலாறு, இலக்கியம், சமயம், மொழியியல் எனப் பல்வேறு துறைகளிலும் தமிழ் ஆய்வாளர்கள் ஆய்வுகளை மேற்-கொள்ளத் தொடங்கினர். பழந்தமிழ் நூல்கள் அச்சேற்றி வெளிக் கொண்டு வரப்பட்டன.

பழந்தமிழ் ஆய்வாளர்கள் யாரும் தங்களை மார்க்சியர்க-ளாகக் கருதிக் கொண்டதாகத் தெரியவில்லை. மார்க்சியமா, குறளியமா என்றோ, அல்லது கருத்து வழக்கா (வாதமா), பருமை வழக்கா, கதம்ப வழக்கா என்றோ, இவர்கள் அவ்வள-வாகக் கவலைப்பட்டுக் கொள்ளவும் இல்லை. என் கடன் தமிழ்ப் பணி செய்து கிடப்பதே என்ற பாணியில் இவர்கள் அகழ்வு வேலைகளில் ஈடுபட்டு வந்தனர்.

சரக்குப் பொருளியலின் வளர்ச்சி, புதின முதலாண்மை உருவாக்க (உற்பத்தி) முறையின் தொடக்கம், ஆகிய பருமை நிலவரங்களினூடே நடைபெற்று வந்த இத்தகு அகழ்வாய்வுகள், தந்தை பெரியாரின் தன்மானப்புரட்சி இயக்கத்தில் குமுகாய அரசியல் வெளிப்பாட்டினைப் பெற்றன எனலாம்.

இந்நிலையில், பழைய இலக்கியங்களுக்கு எதிராகப் போர் முரசங்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கின. அகழ்வு வேலைகள் முற்றுப் பெருத நிலை ஒரு புறமும் புதிய இலக்கியங்கள் ஆராயப்பட வேண்டும் என்ற தீவிரம் ஒருபுறமுமாகப் பொதுமை வழக்கு (வாத) மறுப்பாளர்கள் (நாத்திகர்கள்) தமிழியக்கத்தினுள் நுழைந்தனர். அரைகுறையாகவேனும் வளர்ந்துவிட்ட முதலாண்மை சற்றே தள்ளாடத் தொடங்கிவிட்டது அல்லவா?

மு. வரதராசனுர் போன்றவர்கள் பழமைக்கும் புதுமைக்கும் இடையே நின்று கொண்டு இருந்தார்கள். கைலாசபதி போன்றவர்கள் புதுமை முரசுகளை ஓங்கி முழக்கிட முனைந்தனர்.

இப்படியாக, தமிழினத்தின் ஆதனைத் தேடுகின்ற முயற்சிகள் ஓரங்கட்டடப்பட்டன. ஆதனு, புலம்பனு என்ன அது, என்று கேட்பவர்களாயிற்றே, இவர்கள். இனமா? என்ன பிதற்றல்!, 'வருக்கமல்லவா, என்று அன்றே. இவர்கள் கேட்பார்கள்! ஆக, தமிழாய்வும் உருப்படவில்லை; மார்க்சியச் சிந்தனையும் இயல்பாக வளரவில்லை.

பழந்தமிழறிஞர்களின் ஆய்வுகள் பெரியாரின் தன்மானப் புரட்சி இயக்கத்தில் பெருமைக்குரிய இடங்களைப் பிடித்தன என்றால், புதுத்தமிழர்களின் ஆய்வுகள் தமிழினத்தின் எழுச்சிக்கு வலுவூட்டிட முன்வந்திருக்க வேண்டும். ஆனால் இவர்களோ, உருசியாவிலும் சீனத்திலும் தங்கள் ஆதன்(ஆன்மாக்)களைத் தேடிக் கொண்டு இருந்தனர். தடைகளைத் தகர்த்து எறிந்து முன்னேறி இருக்க வேண்டிய முதலாண்மை, தயங்கி நின்ற தேக்கத்தில் இவர்கள் பொதுமைக் கனவுகளைக் காணத் தொடங்கினர் எனலாம்.

சிலர் ஈக(தியாக) வேள்விகள் பற்றி பாக்(கவிதை)களையும் கதைகளையும் எழுதிக் குவித்து, அந்தப் ''படைப்புகளின்'' மேல் ஏறி நின்று, இந்தியாவின் சிவப்பாதனை எட்டிப்பிடித்திட எண்ணி வானத்தை நோக்கிக் கை நீட்டிக் கொண்டிருந்தார்கள். சிலர் ஆரிய—இந்திய ஆத(ஆன்மாவி)னுள் உருசிய ஆதனை நுழைத்து விடுகின்ற முயற்சிகளில் மூழ்கத் தொடங்கினார்கள். இல்லை, இல்லை, சீன ஆதன்(ஆன்மா)தான் இந்திய ஆதனுக்குப் பொருத்தமானது என்று வழக்கிட்டுக் கொண்டிருந்தனர் மற்றும் சிலர்.

இந்தச் சிற்றாதன்களை எல்லாம் எள்ளி நகைத்து வந்த பேராதன் வழக்காடிகளோ, மார்க்சியப் பேராதனின் ஒளிவட்டத்தில் உலகப் பரமாதனை எட்டிபிடித்திட முனைந்து கொண்டிருந்தனர்.

இப்படியாக, சிறிது சிறிதாகச் சிந்தனை வட்டங்கள் எண்ணிக்கையில் பெருகத் தொடங்கின. மார்க்சு வட்டம், ஏங்கெல்சு வட்டம், இலெனின் வட்டம், இஸ்தாலின் வட்டம், மாவோ வட்டம், திரோத்ஸ்கி வட்டம், எனப் பல்வேறு வட்டங்கள்! இவற்றில் கலப்பு வட்டங்களும் உண்டு;

இந்த வட்டங்களை எல்லாம் கடந்து சிந்தனையின் ஆழத்திற்குள் செல்ல முயன்று வந்தவர்கள் கூட, பரவலாக வட்டங்களுக்குள் இழுக்கப்பட்டு இறுதியில் சிறைப்பிடிக்கப்பட்டு விட்டனர்.

இதையும் மீறிச் சிந்தனையின் ஆழத்திற்குள் இறங்கிப் பார்த்தவர்களும் ஆழத்தின் தனிமை இருட்டுக்கும் வட்டங்களின் ஏளனங்களுக்கும் அஞ்சி மூச்சை அடக்கிய படியே மேலுக்கு வந்து வட்டங்களினுள் தஞ்சம் புகுந்திட முற்பட்டுவிட்டனர். அறிவு வட்டம், கலை வட்டம், கதை வட்டம், பாடல் (கவிதை) வட்டம், என்று பல்வேறு வட்டங்கள் அவர்களுக்காகக் காத்திருந்த சாயலில் (பாவனை)யில் அவர்களை வரவேற்றன. அரைகுறையாகவேனும் ஆழத்தை ஆய்ந்து வந்தவர்களோ, ஒட்டிக்கொள்வதற்கு வட்டங்கள் எதுவும் இல்லாமல் விரட்டி விரட்டி அடிக்கப்பட்டனர்.

ஆனால், ஒரு நாள், தமது திசையைத்தவிர பிற அனைத்துத் திசைகளையும் பார்த்து மெய்க்களிப்பு (பரவச)ப்பட்டுக் கொண்டு இருந்த இவர்கள் எல்லாரும், அனலிடைப்பட்ட புழுவைப்போல துடிதுடித்துப் போனார்கள். பழக்கப்பட்ட பாசக் குரல்கள் கூக்குரல்களாக எட்டி வந்து, இவர்கள் காதுகளைத் துளைத்துக்குடைந்தன. 'அய்யகோ' என்று இவர்களின் நெஞ்சம் பதறத் தொடங்கியது.

தமது சொந்தத் திசையை—சொந்த மண்ணை—சொந்த மாந்தர்களை-இவர்கள் திரும்பிப் பார்த்தாக வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு ஏற்பட்டது. திரும்பினார்கள்.

குருதி தானாகக் கொதித்தது; நெஞ்சம் தானாகத் துடித்தது; மனம் தானாகப் பதைத்தது; தசை தானாக ஆடியது. பற்றி எரிந்தது தமிழ் ஈழம் ஆயிற்றே! இதோ, எனது இனம், என் மக்கள், என இவர்கள் தமது சொந்த ஆதன்களை அடையாளம் கண்டு அரவணைக்க முற்பட்டபோது, அதிர்ச்சியாக, தமிழினத்தின் திராவிட மரபுகளுக்கு உரிமை கொண்டாடி வந்த கூட்டங்கள் எல்லாம் தமிழினத்தின் ஆதனைத் தவிக்க விட்டு விட்டு ஓடிப்போய் இருந்ததைக் கண்டார்கள்.

பழந்தமிழறிஞர்களின் ஈடுபாடுகளுக்கும் இனமானப் புரட்சியாளர்களின் எழுச்சிகளுக்கும் இவர்களுக்கு பொருள் விளங்கத் தொடங்கியது. தமிழியக்கத்தின் குறுகலான பாதை இவர்கள் முன்னே நீண்டு விரியத் தொடங்கியது.

இந்தப் பின்னணியில் பார்க்கின்ற பொழுதுதான், ''ஆசியத் தகவு'' போன்ற நூல்கள் முகாமையான ஒரு திருப்பம் என்பதை நம்மால் புரிந்து கொள்ளமுடியும்.

சிறந்த ஆங்கில நடை, தெளிவான கருத்துக் கோவை, சலிப்பூட்டாத வழக்காடல்கள் (வாதங்கள்) முதலியவை இந்த நூலின் சிறப்புகள்.

(தொடரும்)

# தென்மொழி 30-ஆம் ஆண்டு நினைவுகள்!

இயல்: 1, இசை: 2. (17—8—59)

## தமிழின் சொல்லியலமைதி

வடமொழியில் சொற்களுக்கும் பாலும் எண்ணும் வேறே; பொருள்களுக்குப் பாலும் எண்ணும் வேறே. 'கல்' என்னும் பொருள் தமிழிலே அஃறிணை, ஒன்றன் பால் சொல். அதன் வேறு பெயர்களும் அப் பாற்சொற்களே! வடமொழியிலோ 'கல்' என்னும் பொருளைக் குறிக்கும் 'பாஷாணம்' என்பது ஆண்பாற் சொல்; அதன் பரியாயப் பெயராகிய 'சிலா' என்பது பெண்பாற் சொல். தமிழிலே 'மனைவி' உயர்திணை, பெண்பாற் பொருள்; அச் சொல்லும் அப் பாற் சொல்லே. வடமொழியிலோ மனைவி-யைக் குறிக்கும் 'தாரம்' என்னும் சொல் ஆண்பால் பெயர்; அதுவேயுமன்றி அச்சொல் கருத்தால் ஒருமையே யாயினும் சொல்லால் பன்மையேயாம். (இனி, அதே பொருளைக் குறிக்கும் 'களஸ்திரம்' என்னும் வடசொல் அலிப்பால் ஆகும்.) இந்தியில், இவ்வாறுள்ள மாறுபாடு வடமொழியை நோக்கக் குறைவென்-பதேயன்றித் தமிழை நோக்க மிகுதியே யாகும்.

பழைய ஆங்கில மொழியிலே மேற்கூறிய குறையிருந்தது, டம் (Dom) ஈற்றான் முடிவனவாகிய (Freedom) முதலியன ஆண்பாற் பெயர்கள். நெஸ் (ness) ஈற்றான் முடிவனவாகிய (goodness) முதலியன பெண்பாற் பெயர்கள். யென் (en) ஈற்றான் முடிவனவாகிய Maiden, chicken, Kichen முதலியன அஃறிணைப் பெயர்கள். பண்டிருந்த இம் மாறுபாடு இக் காலத்து அறிஞர்களால் ஒழிக்கப்பட்டன. தமிழ்மொழியோ இத்தகைய குறைபாடு பண்டே இல்லாதது. இது தமிழின் சொல்லி-யலமைதிக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

—(தமிழ்ப்பொழில் 1925)

## தமிழ்மொழியும் வடமொழியைப்போல வழக்கற்றுப் போய்விடும்!

தமிழ் மொழியிலோ யார் என்ன செய்த போதிலும் கேள்வி முறையில்லை. அவரவர் தத்தமக்குத் தோன்றியவாறும், வாய்க்கு வந்தவாறும் எழுதுகின்றனர். இவ்வாறு செல்ல விடுதல் கேடே. தமிழிலக்கணமுடையார் முற்புகுந்து இதனைச் சிறிது அடக்கியாளினும் வேண்டும்... இந்நிலை மிகுந்து கொண்டே போமாயின் புலவர் தமிழ், வடமொழியைப் போலப் பேச்சு வழக்கற்று ஏட்டு வழக்காய் மட்டில் நின்றுவிடும்.

—'பரிதிமாற்கலைஞர்'—தமிழ்மொழியின் வரலாறு.

## கூறுபட்ட தமிழ்த்தாய்!

சிறப்பு வாய்ந்த நமது அருமைத் தமிழ் நாடெங்கே? தமிழ்

நாட்டின் வழக்க வொழுக்க மெங்கே? அன்பெங்கே? அரசெங்கே? மறத் தாய்மாரெங்கே? தமிழ்த் தாயெங்கே? தமிழர்களே! உங்கள் பெருமை யென்ன? உங்கள் ஆண்மை என்ன? உங்கட்குள் இதுபோது எத்துணைப் புரிவு? நம் தமிழ்த்தாய் கால்வேறு, கை-வேறு, தலைவேறு, வேறாகக் கூறுபட்டுக் கிடப்பதைக் காண உங்கட்குக் கண்ணில்லையா? நினைக்க மனமில்லையா? மீண்டும் நீங்கள் பண்டைநிலை எய்த வேண்டாமா? வேண்டுமேல் பழந்-தமிழ், நூல்களை ஆராய்ந்து உண்மைத் தமிழ்நாட்டைக் காண எழுங்கள்! எழுங்கள்!' —தமிழ்த்தென்றல்—திரு. வி. க.

## கலையும் கலைஞனும்!

கலை என்பது இயற்கை நுகர்ச்சி. தூய்மையான நீலவான் போன்றது கலை. உள்ளத்தாழ்வும், ஒழுக்கக் குறைவும் போன்ற செயற்கை முகிலினம் படரும் காலை துல்லியமான நீல வண்ணம் நன்கு ஒளிர முடிவதில்லை.

கலைஞனும் அப்படிப்பட்டவனே. இயற்கையை விட்டு விலகிய எந்தக் கலையும் ஒருவர்க்குத் தூய்மையையோ, அமைதி-யையோ தந்துவிட முடியாது. சுண்ணமும், செங்கற்களும் போர்த்திய மாடி வீடுகளில் அமர்ந்து கொண்டு, முல்லைக் காட்டின் குளிர்மையையும், காவிரி மணற்பரப்பின் வெது வெதுப்பையும், மலையினின்று கொட்டும் அருவியின் சிலிர் சிலிர்ப்-பையும் அறிய முடியாது. அறிவு வேறு; கலை வேறு. அறிவு மூளைக்குத் தெளிவு; கலை உணர்வுக்குத் தெளிவு, அறிவும் கலையும் பின்னிப் பிணைந்த பாடல்களே நம் இலக்கியங்கள். இதைப் படிப்பது இன்பம்; பாடுவது இன்பம்.

—ஆசிரியர், 'பாட்டும் கூத்தும்'—முன்னுரை.

## மாணவரும் அரசியலும்!

—பெருஞ்சித்திரனார்

மாணவர் அரசியலில் ஈடுபடலாமா, கூடாதா என்பது பற்றி அடிக்கடி பொதுக் கூட்டங்களில் பேச்சு நிகழ்கின்றது. மாணவர் தம் எழுச்சியுள்ளங்கட்கும், இளமைத் துடிப்புக்கும் ஏற்ற உணர்ச்சி எருவைப் போட்டு ஈர்த்து, அவரைப் பெரும்பாலும் தன்னகத்தே கொண்ட கட்சிகள் அவர் அரசியலில் ஈடுபடுவது குற்றமன்று எனவும், மாணவர்தம் எதிர்கால வாழ்வில் பெருத்த நம்பிக்கை கொண்டு, அவர்க்குக் கசக்கும் ஒழுக்கங்களைக் கூறி, அவர் வெறுப்பைத் தேடிக் கொண்ட கட்சிகள், அவர்கள் அரசி-யலில் ஈடுபடுவது பெருந்தீங்கே எனவும், மாறி, மாறி முழக்க-மிட்டுக் கொண்டிருப்பதை நாம் அடிக்கடி காண்கிறோம்.

'மாந்தனுக்கு வயிறு பிறந்த போதே அரசியல் அறிவு பிறந்-தது' என்றும், 'அவன் வாய் திறந்த போதே ஆட்சி பிறந்தது' என்றும் கூறுவர்...

சிறுவர்கள் தாமும் அரசியல் என்பது பற்றி ஒன்றும் அறியாதவராயிருந்தும், நான் அவர் கட்சி, நான் இவர் கட்சி என்று பகுத்துப் பேசுவதைக் காண்கின்றோம்...

...ஒரு தலைவரை அவர் அறிவுக்காகச் சிலரும் அவர் பண்புக்காகச் சிலரும், அவர் பேச்சுக்காகச் சிலரும், அவர் கொட்டும் வெற்று ஆரவாரச் சொற்களுக்காகச் சிலரும், அவர் வைத்திருக்கும் பணத்திற்காகச் சிலரும், அவர் பால் பல நன்மையை எதிர்பார்த்துச் சிலரும்... இன்னும் பல்வகைக் காரணங்களுக்காகப் பலரும் விரும்புகின்றனர். அவரைப் பின் பற்றுகின்றவரில் நூற்றுக்குப் பத்து விழுக்காடு மக்கள்கூட எல்லாக் கருத்தாலும், நடவடிக்கைகளினாலும் ஒத்தவராக இருக்கமாட்டார்...

...மாணவராய் இருக்குங்கால் எவர் ஒருவர் என்ன கட்சிக்காக, உயர்மேடையில் ஏறிப் பெருங் குரலெடுத்துப் பேசியும், பல உயிர்ப் போராட்டங்களில் ஈடுபட்டும் வருகின்றாரோ, அவரே இள முதுமைப் பருவத்தில், அல்லது முதுமைப் பருவத்தில், தாம் முன் கொண்டிருந்த கருத்துகளும், கொள்கைகளும் மிகத் தவறென்று கண்டுணர்ந்து வேறு கட்சிகளில் சேர்ந்து உழைப்பதும், அவ்வாறில்லாதவர்கள் அரசியலை விட்டே விலகுவதையும் நாம் பார்த்தும் கேட்டும் படித்தும் இருக்கின்றோம். இப்பொழுது அரசியல் கட்சிகளில் உறுப்பினராகவிருந்து வரும் முதுமையர் தம்மிற் பெரும்பாலோர் அத்தகையோரே!

இனி, ஒருவர்க்கு அரசியலறிவு மிக வேண்டுவதே. ஆயினும், அஃது எத்தகைய காலத்தே வேண்டுவதாகும் என்பதே ஈண்டு எண்ணத்தக்கது. பொதுவாக உலகறிந்த மாணவர் பருவம் என்பது பதினாறு அகவை முதல் தொடங்கி இருபத்தைந்து அகவை ஈறாக முடிவதாகும். அதன் மேலும் கீழும் மாணவராய் இருப்போரைப் பற்றி எவரும் அஞ்ச வேண்டுவதில்லையாதலின், அது பற்றி நாம் கூறவும் வேண்டுவதில்லை என்க.

இத்தகைய மாணவர் பருவம், முதுமைப் பருவத்தினும் வலிய உணர்வு பெற்றதாயும், பொறுமையற்றதாயும் அமைந்துள்ளது. வெறும் வெற்றுணர்வும், பற்றுணர்வும் காரணமாக ஒன்றை எளிதிலே ஏற்கவும், தள்ளவும் ஆன பருவமாகும் அது. இத்தகைய பருவத்தேதான் காதல் முதலிய உள்ளுணர்வு நிகழ்ச்சிகளும் மாணவர்தம்மைப் பற்றிக் கொள்கின்றன. ஆனாலும் அக்காலத்து உள்ளுணர்வு, மெய்யுணர்வின்றித் தோன்றுவதால் பெரும்பாலான காதற் காட்சிகள் பட்டுப் போகின்றன. துளிர்த்து வரும் ஒரு சில நிகழ்ச்சிகளும் பெருமுதுமைக் காலத்தே துன்பமாக முடிவடைகின்றன.

அரசியலும் இதைப் போன்றதே! மாந்தன் ஒருவனுக்கு மணம் மிகத் தேவையானதென்று, அதனை மிக இளமையிலேயே செய்து வைத்தல் ஏற்புடைத்தாகுமோ? இல்லறப் பொறுப்பும், மனைவியின் மாட்சியும், வாழ்க்கையின் மேம்பாடும், பாலியல் (Sex) உயர்வு தாழ்வும், நெறி முறையோடு புரிந்து கொள்ளாத பருவம் மாணவப் பருவம்...

அரசியலில் தெரிந்து தேற வேண்டியவையான, தலைவர் தம் மனவாற்றல், அவர் தம் வினையாற்றல், அவர் மேற் கொண்டொழுகும் கொள்கைமேல் தெளிவு, அது நாட்டிற் பரவ வேண்டுவதன் தேவை, அதன் காலப் பொருத்தம் முதலிய நுட்பப் பாகுபாடுகளும், கட்சியின் ஒழுங்கு, இயங்கு முறை, ஏற்றத்தாழ்வின்மை, பொருள் வலி, உள்ளெதிர்வின்மை முதலிய நிகழ்வுப் பாகுபாடுகளும், உள்ளறிந்து ஈடுபடக்கூடிய உலகியல் அறிவும், பொறுமையும், கடைப்பிடிக் கொள்கையும், கால ஓய்வும் இருப்பதில்லை.

தமக்குள்ள நூல்களைக் கற்பதற்கே போதிய காலங்காணாது தேர்வுக்கால நெருக்கத்தில், இரவு பகல் ஓயாது மண்டையிலேற்றும் தற்கால மாணவர்கட்குக் கிடைக்கும் சிறு ஓய்வும், திரைப்படம், நாடகம் முதலிய இரவுக் காட்சிகளிலும் வீணே செலவழிக்கப்படுகின்றமையை யாவரும் அறிவர்; நல்லறிவு காணும் மாணவர் உலகத்தின் அரிய காலத்தை இவ்வாறு கூறு போட்டுக் கொள்ளும் இக் கூற்றங்கள் உண்டது போக எஞ்சியதை அரசியல் கட்சிகள் கூறுபோடுமாயின் அம் மாணவர் உலகத்திற்கு ஊறு நேர்வதில்லை யென்பதைக் கற்றுத் தெளிந்தாரில் ஒருவரேனும் ஒப்பவரோ? ஒப்பார்; ஒப்பார்.

இனி, அரசியல் உணர்வு எழாத மாணவர் இல்லாமல் இருக்க, அவ்வுணர்வு வழி நடத்தல் குற்றமாமோ என்றால், குற்றமே என்போம். இஃது எத்தகையது என்றால் ஆணாகவும் பெண்ணாகவும் பிறந்த போதே மணவாழ்க்கைக்குத் தேவையான பாலுணர்வும், பொறியுணர்வும் பெற்றிருக்கின்றோமே என்று கூறி ஒருவனோ ஒருத்தியோ முழு இளமைப் பருவம் அடையுமுன் மணம் செய்து கொண்டால் என்ன நேருமோ அதைப்போன்றதே அரசியல் அறிவு முற்றாத மாணவர்க்கு அரசியல் ஈடுபாடும்;

ஆகவே எல்லாவற்றானும் மாணவர் அரசியலறிவு கொள்ளலில் எள்ளளவும் தவறில்லை என்றும், ஆனால் அம் மாணவப் பருவம் கழியுமுன் அரசியலில் பங்கேற்று ஈடுபடுவதே பெருங்குற்றம் என்றும் ஓர்ந்துணர்ந்து கொள்க.

## முற்கால வாய்மை நூல்களும் பிற்கால பொய்ம்மை நூல்களும்!

'கம்ப இராமாயண' காலம் முதற்கொண்டு, இன்றை வரையில் தோன்றிய செய்யுள் நூல்களில், பெரும்பாலான பொய்யும் புளுகும் நிறைந்து, தம்மைப் பயில்வார் உணர்வினைப் பழுது படுத்தி, அவரைப் பொய்யிலும் அறியாமையிலும் படுப்பித்து, அவர்க்குத் துன்பத்தை மேன்மேல் பெருக்குந் தன்மையவாகும். ஆதலால், பின்றைக் காலச் செய்யுள் நூற்பயிற்சி எவ்வளவுக்குக் குறைந்து, பண்டைக்காலச் செய்யுள் நூற்பயிற்சி எவ்வளவுக்கு மிகுந்து வருமோ, அவ்வளவுக்கு நம் தமிழ்மக்கள் மெய் உணர்வுடையராய்த் துன்பக் கடலை மீண்டு, இன்பக் கரை ஏறுவர்.

—மறைமலையடிகள்.

# வேண்டாம், சமசுகிருதம்!

—கீதா உதயகுமார்.

சமசுகிருதம் ஓர் இறந்த மொழியன்று என்றும், அதனை இந்தியாவின் இணைப்பு மொழியாக்க வேண்டும் என்றும், வேண்டி, சில மடல்கள் இப்பகுதியில் வெளிவந்துள்ளன. சமசு-கிருதம் இறந்த மொழி அன்று; உண்மை; ஏனெனில் அ'து ஒருபோதும் வாழவில்லை. எவை வாழ்கின்றனவோ, அவை மட்டுமே இறக்கும். நடுக்காலத்திலும், அண்மைக்காலத்திலும், பல்வேறு அரசுகள் வழங்கிய அரவணைப்பினாலும் இம்மொழியை அன்றாட வாழ்க்கை மொழியாக்க முடியவில்லை. இது பேச்சு மொழியாக இருந்தால் பொதுமக்கள் இதன் தூய்மையைக் கெடுத்துவிடுவர் என்று அஞ்சிய, செருக்கு கொண்ட இம்மொழி-வாணர்கள் இதற்குத் ''தெய்வமொழி'' என்று பெயர் கொடுத்து, மக்கள் வழக்கிலிருந்து இம்மொழி எப்போதும் விலகி-யிருக்குமாறு செய்தனர். மிகவும் கடுமையாகப் பார்ப்பனியத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்குக்கூட வட்டார மொழிகளில் ஏதா-வது ஒன்றே தாய்மொழியாக உள்ளதே தவிர, சமசுகிருதம் தாய்மொழியாக இல்லை. சமசுகிருதம் ஒரு போதும் மக்கள் வழக்கு மொழியாக இருந்திருக்கமுடியாது என்போரின் கூற்றைச் சற்றும் ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்க இ'து உதவுகிறது. 'சாதி' என்ற நச்சின் வேர்கள், பழஞ்சமசுகிருத இலக்கியத்தில் ஆழப் பதிந்துள்ளன. இம் மொழியை வழக்கு மொழியாக்க எடுக்கும் எந்த நடவடிக்கையும், ஏற்கனவே நாட்டில் உள்ள மொழிக் குழப்பத்தை அதிகரிப்பது மட்டும் அல்லாமல், சாதி-முறையை ஒழிக்க, நடுவண், மாநில அரசுகள் எடுத்து வரும் முயற்சிகளை முறியடிக்கவும் செய்யும். சமசுகிருதம், தற்கால இந்திய மக்களுக்கு ஏற்ற மொழி அன்று என்ற உண்மையை விளக்க கீழே கொடுக்கப்பட்டுள்ளவை உதவும்.

''பிழைப்பிற்காகத் தெருவில் நடமாடும் எந்த மாந்தருக்கும் சமசுகிருதம் தெரிந்த மொழி அன்று. தங்களுடைய கருத்துகள் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்று விரும்பியோர் பிரா-கிருதம் முதலியவும் வட்டார மொழிகளைக் கையாண்டனர். புத்தர் அறிவுரைத்தபோது, வட்டார மொழிகளைப் பயன்படுத்து-மாறு வேண்டினார். நன்னெறிகளைப் பரப்ப பேரரசன் அசோகன், தன் ஆட்சிக்குப்பட்ட நிலத்தின் மொழிகளையும், வரிவடிவங்களை-யும் பயன்படுத்தினான். தாம் ஒரு சமசுகிருத வாணராய் இருந்த போதும், துளசிதாசர் தம்முடைய தாய்மொழி அமுதம் ஏந்திய மண்பாண்டம் என்றும், சமசுகிருதமொழி நஞ்சு அமைந்த அழகிய வேலைப் பாடமைந்த கிண்ணம் என்றும், அதனால்தான், தம்முடைய தாய்மொழியைத் தேர்வு செய்ததாகவும், காரணம் சொன்னார். கட்ரே என்ற சீர்திருத்தாளர், தேங்கிய கிணற்று நீருக்கு சமசுகிருதத்தையும், தெளிந்த நீரோடைக்கு மக்கள் வழக்கு மொழியையும் ஒப்பிட்டார். ''செயற்கையானதும், விறைப்பானதுமான இலக்கணத்தைக் கொண்ட சமசுகிருத

# அத்திப்பூ

## நாடக ஆக்கம் -அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 'பாவியக் கொத்' தில் ஒரு மலர்.)

ஓர் இடத்தில் இந்த ஆள்கள் இருக்கிறதில்லை: எந்த இடத்தில் குளிர்மை தெரிகிறதோ அங்கே போய்ச் சேர்ந்து கொள்வார்கள்.

பெண்-2: அப்படித்தான் சொல்லுகிறார்; இன்றைக்கு ஒரு கட்சிப் பெயரைச் சொல்லி அவர்களுடன் போகிறார்; நாளைக்கு ஒரு கட்சி...

பெண்-6: ஏன் இப்படி இடம் விட்டு இடம் மாறுகிறீர் எனக் கேட்டாயா?

பெண்-2: கேட்டேன்.

பெண்-6: என்ன சொன்னார்?

பெண்-2: உருண்டை ஏனமாம் அவர்;

பெண்-6: அப்படியென்றால்...?

பெண்-2: சுற்றிக் கொண்டே இருக்குமாம்!

பெண்-6: தஞ்சாவூர் பொம்மை என்று சொல்லு.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மொழி இந்தியாவில் மக்கள் வழக்கு மொழியாக இருந்திருக்க முடியும் என்பதைப் புனைவு செய்து பார்ப்பதும் கடினம்'' என்கிறார், பிரெடரிக் பாட்மெர் (Frederick Bodmer) என்ற மேலை நாட்டவர். தற்கால இந்து சமய சீர்திருத்தாளர்களும் இக்குறையை வலியுறுத்துவதுடன், எண்ணங்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்தும் வாயிலாக சமசுகிருத மொழியைக் கையாளுவதை விட்டுவிட வேண்டும் என்கின்றனர். ''மக்களிடையே அறிவு விளக்கம் பரவுவதற்குப் பல காலமாகத் தடையாக இருந்ததும், மிகவும் கடினமானதும், கற்பதற்கு ஒருவரின் வாழ்நாள் முழுவதையும் செலவிட வைப்பதுமானதும், சமசுகிருத மொழியே'' என்பது அனைவருக்கும் தெரிந்ததே. இம்மொழியின் கடினமான முகவுறையை ஊடுருவி இதனைக் கற்பவர்கள் அடையும் பலன், இதனைக் கற்பதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு ஒரு சிறிதும் ஈடாகாது.'' என்கிறார் ''இந்து உலகம்'' என்ற நூலில் பெஞ்சமின் வாக்கர் என்பவர்.

மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளவர்களும் இந்து சமைய, 'மெய்ம்மங்களில் ஈடுபாடு உடையவர்களும் மட்டுமே படிக்க வேண்டிய மொழி சமசுகிருதம்.

('இந்து' நாளிதழ் மடல் பகுதிக்கு விடுத்த படியின் தமிழாக்கம்.)

பெண்-2: ஆமாம், அது மாதிரிதான்.

பெண்-6: சரி. ஆளை சரியாகக் கவனித்துக்கொள். எந்தக் கட்சியாம்?

பெண்-2: அதையெல்லாம் சொல்லவில்லை. அவர்கள் கட்சிக்குத் தலைவர் வந்து ஒரு பெண்ணும்.

பெண்-6: அப்படியானால் ஊருக்கே வரமாட்டாரே!

பெண்-2: வரவே மாட்டார். வந்தாலும் உடனே போய் விடுவார். அதனாலேயே அவரை நினைத்து நினைத்து ஆனை மாதிரி இருந்த நான், இப்போது அரும்பு மாதிரி இளைத்துவிட்டேன்.

பெண்-4: (3-ஆவது பெண்ணைக் கையால் இடித்து) உன்னுடைய நல்லிரா எப்படி?

பெண்-3: நல்லிரவா அது? முதல் இரவு என்பதையே மறந்து போனேன்.

பெண்-5: மறந்து போனாயா?

பெண்-3: ஆமடி, நன்றாக உறங்கிவிட்டேன்.

பெண்-5: எங்கே? அறைக்குள்ளேயா?

பெண்-3: இல்லேயடி. வெளியிலே.

பெண்-5: பிறகு.

பெண்-3: பிறகு என்ன? இரண்டு பேர் வந்து இரண்டு இடி இடித்து எழுப்பி, இந்த நல்லிரவிலேயா உறங்குவது? அடா, உறங்கு மூஞ்சி, ஏனடி உறங்குகிறாய்? என்று திட்டி எழுப்பினார்கள்.

பெண்-5: அப்புறம்?

பெண்-3: அப்புறம் என்ன? உள்ளே போனேனா; அவர் என்னைப் பார்த்துக் காதிலே கிடந்த தொங்கலை எங்கே என்றார்.

பெண்-5: ஐயாவிற்கு கண் எதன் மேலே பார்த்தாயா?

பெண்-3: நகைக்காகத்தான் அவர் என்னைக் கட்டினார். ஏன்னா நான் ஆள் கறுப்புத்தானே.

பெண்-5: சரி. பின் என்ன ஆனது?

பெண்-3: தொங்கலைத் தொட்டுப் பார்த்தேன், காணவில்லை.

பெண்-5: ஐய்யய்யோ. என்ன செய்தாய்?

பெண்-8: அங்கொரு பெண் அடிமடியில் வைத்திருந்தாள். அவளைப் பிடித்து வாங்கிக் கொண்டேன்.

பெண்-5: மகிழ்ச்சியடைந்திருப்பாரே.

பெண்-3: நல்லிரா நல்லபடி முடிந்தது. தொங்கல் கிடைக்காமல் இருந்திருந்தால், நல்லிரவு பொல்லா இரவாக மாறி இருக்கும்.

பெண்-5: நல்ல வேளையாய்த் தப்பித்தாய்.

பெண்-6: (4-ஆவது பெண்ணைப் பார்த்து) உன்னுடைய தலையிரா எப்படி?

பெண்-4: எனக்கு அஃது அணி இராவாக அமைந்தது.

பெண்-5: அணி இராவா? அப்படி யென்றால்?

பெண்-4: அவர் எனக்கு ஒரு விரலணி அணிந்தார்.

பெண்-5: ஓகோ. அதனால்தான், அந்த இரவை அணியிரா என்கிறாயோ? சரி பிறகு.

பெண்-4: விரலணியைத் தொலைத்துவிட்டேன்.

பெண்-5: அடடா! (பெண் 3-ஐச் சுட்டி) அவள் தொங்கலைத் தொலைத்தாள். நீ விரலணியைத் தொலைத்துவிட்டாயாக்கும். உன்னை ஒன்றும் கேட்கவில்லையா?

பெண்-4: அணியிரா அறைக்குள் போகவே அஞ்சினேன். இடுக்கு வழியாக அவரைப் பார்த்தேன். அச்சம் உடலை ஆட்டியது.

பெண்-5: விரலணி கிடைத்ததா?

பெண்-4: கிடைக்கவில்லை. அதனால்தானே அஞ்சினேன்.

பெண்-5; இப்போது எப்படி இருக்கிறார்?

பெண்-4: என்னிடம் அஞ்சுவார், கரணம் போடச்சொன்னால் எண்ணிக் கொள் என்பார்.

பெண்-5: அப்படியானால் உன் கணவனை அடக்கி வைத்து விட்டாய் என்று சொல்.

பெண்-4: (சிரித்து) ஆமாம். பெட்டிப்பாம்பு. நான் என்ன சொன்னாலும் அப்படியே கேட்பார். அது சரி (5-ஆவது பெண்ணைப் பார்த்து) எல்லோருடைய முதல் நாள் நிகழ்ச்சியைப் பற்றிக் கேட்டாயே உன் இரவு எப்படி இருந்தது?

பெண்-5: எனக்கா, அஃது ஒரு தனி இரவாக அமைந்தது.

பெண்-4: அப்படியென்றால், கமுக்கமாய்ப் பேசினீர்களோ?

பெண்-5: ஆமாம். அஃதாவது பிள்ளைப் பிறப்பே வேண்டாம் என்றேன்.

பெண்-4: அவர் உடன்பட்டாரா?

பெண்-5: அதை ஏன் கேட்கிறாய்? எங்கள் இருவருக்கும் திருமணமாகிப் பத்து ஆண்டுகள் இருக்கும் ஒன்பது பிள்ளைகள் இருக்கிறார்கள்.

பெண்-4: ஓராண்டை ஏன் வெறுமனே விட்டாய்?

பெண்-5: போதாதா இத்தனையும்! ஒன்பதையும் கட்டி அழுவதற்குள் நான் படும்பாடு.

பெண்-4: இப்பொழுது சொல்லுகிறாயே. முன்னாலேயே கட்டுப்பாடாக இருந்திருந்தால் இந்தத் தொல்லை இருந்திருக்காதல்லவா?

பெண்-5: நான் இருந்தேன்; அவர் என்ன சொன்னார் தெரியுமா?

பெண்-4: என்ன சொன்னார். அதைக் கொஞ்சம் சொல் பார்க்கலாம்.

பெண்-5: அதாவது என் கணவர் வந்து, தமிழ் மீது அளவிலா அன்பு கொண்டவர்.

பெண்-4: என்னது? பிள்ளைப் பேற்றுக்கும் தமிழுக்கும் என்னடி தொடர்பு.

பெண்-5: இப்போது தமிழர்கள் பிள்ளைகளைப் பெற்றுத் தமிழ்ப் பெயர் வைப்பது கிடையாது. ரமேஷ், உமேஷ், இப்படிப் புரியாத பெயர்களை வைக்கிறார்கள். அதனால் என் கணவர் மிகுதி-யாகப் பிள்ளைகளைப் பெற்றுத் தமிழ்ப் பெயர்களாக வைத்து அப்படிப் பட்டவர்களுக்கு முன் மாதிரியாக இருக்கவேண்டுமாம். தமிழ்ப் பெயரை அழைத்து மகிழவேண்டுமாம். அதற்காகக் கூடு-தலாகப் பிள்ளைகளைப் பெறவேண்டும் என்று முயலுகிறார்.

பெண்கள்: (6 பேர்களும் கொல்லென்று சிரிக்கிறார்கள்.)

பெண்-4: அப்படியானால் அதுவும் சரிதான். ஆனால் நீ புடலங்காய் மாதிரி தேய்ந்து சுருண்டு போய் இருக்கிறாயே, உடலையும் கவனித்துக் கொள். என்ன?

பெண்-6: நான்-பார் பூசுணை மாதிரி, பருத்து இருக்கிறேன்; எனக்குப் பிள்ளையே பிறக்கவில்லையே, நான் ஒரு பிள்ளைக்காக ஏங்கித் தவிக்கிறேன். பிள்ளையே இல்லையே.

பெண்-3: உனக்குப் பிள்ளையே இல்லையா?

பெண்-6: இல்லை.

பெண்-3: கோயிலுக்குப் போனாலென்ன?

பெண்-6: போனேனம், போனேனம். காசிக்குப் போனேன். ஒரு திங்களில் உனக்குப் பிள்ளை உருவாகும் என்றான், அங்கொரு பூசாரி; இல்லை. இராமேசுவரம் போனேன்; கன்னியாகுமரி போனேன். கண்ட கண்ட கோவிலையெல்லாம் சுற்றிச் சுற்றிக் கும்பிட்டேன். பிள்ளையையும் காணோம், ஒரு கழுதைக் குட்டியை-யும் காணோம்.

பெண்-4, நம்ம ஊர் பூசாரியைக் கேட்டால் என்ன கரணியம் என்று கூறுவாரே.

பெண்-6: அவருக்கே பிள்ளை இல்லை; எனக்கென்ன சொல்லு-வார்?

பெண்-4: அப்படியானால் ஒன்று செய்: மருத்துவரிடம் கேட்டுப்பாரேன்.

பெண்-6: கேட்டேன். எல்லாக் கோவில்களுக்கும் போனபிறகு மருத்துவரிடம் போய்க்கேட்டேன். அவர் இரண்டு பேருடைய குருதியையும் எடுத்து ஆய்ந்தார். இரண்டு பேரும் மலடு என்றார்;

பெண்-3: அப்படியே சொல்லி விட்டாரா?

பெண்-1: நான் ஒரு வழியைச் சொல்லுகிறேன்; கேள்;

பெண்-6: என்ன வழியோ? நான் எல்லா வழிகளையும் பார்த்து விட்டேன்;

பெண்-1: நான் சொல்லப் போகும் வழியைக் கேட்டிருக்கமாட்டாய்; நீ செய்தித் தாள்களைப் படிப்பாயா?

பெண்.6: படிப்பேனே.

பெண்-1: ஆய்வுக்குழாய் குழந்தை பிறந்திருக்கிற செய்தியை என்றைக்காவது படித்திருக்கிறாயா?

பெண்-6: நான் மட்டுமா படிக்கிறேன்; என் கணவருந்தாம் படித்துப்பார்த்தார்.

பெண்-1: அப்படியா! அதுபோல செய்துவிட வேண்டியது தானே.

பெண்-6: அப்படி ஒரு பிள்ளையைப் பெற்றுப் பார்க்க வேண்டிய தேவை இல்லை, போ என்று சொல்லிவிட்டார் நம்ம ஆள்.

பெண்-1: ஆய்வுக் குழாய்ப்பிள்ளைத் திட்டம் நடைமுறைக்கு நாடு முழுவதும் வந்துவிட்டால் இந்த ஆண்களே தேவை இல்லை தெரியுமா? மணக் கொடை கேட்க முடியாது. சீர், சீராட்டுகள் என்று கேட்டுப் பெண்ணைப் பெற்றதற்காகத் தண்டமாக ஓட்டாண்டியாக ஆகவேண்டாம் அல்லவா?

பெண்-6: ஆமாம் மருமகளைப் பார்த்து அடுப்பு வெடிக்காது; (எல்லா பெண்களும் சிரிக்கிறார்கள்) அது மட்டுமன்று மாமியாருக்குப் பதவி உயர்வும் கிடைக்கும்.

பெண்-1: என்ன பதவி?

பெண்-6: சிவ உலகப்பதவி!

(எல்லோரும் குப்பென்று சிரிக்கின்றனர்.)

(பெண் ஒன்றைச் சுட்டி) நீ போய் ஆய்வுக் குழாய் பிள்ளையைப் பெற்றெடுக்க ஏற்பாடுகளை விரைந்து செய்.

பெண்-1: நீ சொல்வது நன்மையான திட்டந்தான். மணக்கொடைக்கும்; சாவுமணி. (திரை.) —தொடரும்

## 'சிந்தி' மொழியில் தமிழ்ச் சொற்கள்!

| தமிழ் | சிந்தி | தமிழ் | சிந்தி |
|---|---|---|---|
| கோட்டை | கோட் | ஆயாள் | ஆயாள் |
| இரண்டு | ரென் | மிசை | மூசா |
| மூன்று | மூன் | நார் | நாரி |
| நான்கு | நார் | பண்ணை | பன்னி |
| காவடி | காவதி | மாடி (வீடு) | மாடி |
| தண்டு | தண்டோ | துவரை | துவா |
| | | கொத்தமல்லி | கொத்துமி |

# தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தேவையே இல்லை!

## அமெரிக்கக் கணினி(கம்ப்யூட்டர்) ஆய்வாளர் கருத்து!

தமிழ்மொழி எழுத்துகள் அறிவியல் வளர்ச்சிக்குப் பெரிதும் தடையாக இருக்கின்றன என்றும், இருபதாம் நூற்றாண்டு அறிவியல் கருவிகளில் இக்கால் உள்ள தமிழ் எழுத்துகளைப் பயன்படுத்துவது கடினம் என்றும், எனவே தமிழ் எழுத்து அமைப்புகளை ஒரே சீராக ஆக்கவேண்டும் என்றும், தமிழக அறிஞர் சிலரிடையே நீண்டகாலமாக ஒரு பொதுவான கருத்து உருவாகியிருப்பதையும், அவ்வாறு அவர்கள் கூறப் பெற்ற சில கருத்துகளை—குறிப்பாகத் தந்தை பெரியார் வலியுறுத்திய கருத்துகளை—அடிப்படையாகக் கொண்டு, ம. கோ. இராமச்சந்திரன் ஆட்சிக் காலத்தில், பெரியார் நூற்றாண்டு நினைவாக, ஏழு எழுத்துச் சீர்திருத்தம் ஒன்றை அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்தது.

அதன்படி ஞ, ரு. ஞ. ணை, லை, ளை, னை ஆகிய ஏழு எழுத்துகளிலும் மாற்றங்கள் செய்யப் பெற்று. ஆகார ஒலிக்குக் காலையும், ஐகார ஒலிக்கு 'ை'காரத்தையும் பயன்படுத்த அரசு கட்டளையிட்டது. அதன்பின் அவை முறையே ணா, றா, னா, ணை, லை, ளை, னை—என்று எழுதப் பெற்று வருகின்றன. அவ்வாறே அச்சு முறையிலும் பிற கணினி (கம்ப்யூட்டர்) முறையிலும் பயன்படுத்தப் பெற்று வருகின்றன.

ஆண்டாண்டுக் காலமாக, தொடக்கக் காலத்தில் பனையோலையிலும், பின்னர் தாள் வந்த பொழுது தாளிலும், பின் அச்சு முறை வந்த பொழுது அச்சிலும் எழுதப் பெற்று, அச்சிடப் பெற்று, வடிவடிவத்தில் படி நிலை வளர்ச்சியுற்று, இக்கால் வழக்கில் இருந்து வரும் தமிழ் எழுத்து வரிவடிவங்களை, அள்ளித் தெளித்த அலங்கோலமாகப் மிகமிகப் பரபரப்புடனும், ஆய்ந்தோய்ந்து பாராமலும் ஆட்சியாளர் பெரியாருக்குச் செய்யும் பெருந்தொண்டு இஃதொன்றே என்ற அரைகுறை மன நிறைவில், இவ்வெழுத்துச் சீர்திருத்தம், ஒரு சீர்மை கருதி வரவேற்கக் கூடியதே என்றாலும், இக் கருத்தையே விடாப் பிடியாகக் கொண்ட, அறிவியல் கற்ற அறிஞர்கள் சிலர் தம் அழிந்துபோகும் பெயர்களையும் புகழையும் இதில் நிலை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்னும் புகழ் அங்காப்புடன் மேலும் மேலும் இவ் வெழுத்து வடிவங்களில் புதுப்புதுச் சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும் என்று அரசையும் பொதுமக்களையும் இன்னும் வலியுறுத்தி வந்த வண்ணமாகவே உள்ளனர். இவ் வலியுறுத்தத்தைப் பற்றி அரசு காது கொடாமல் உள்ள நிலையில், தமக்குத் தாமே தன் மூப்பாக, எவரையும் பொருட்படுத்தாமல், தாம் எழுதும் எழுத்துகளிலும், அச்சிட்டுப் பரப்பும் இதழ்களிலும் அறிக்கைகளிலும், பற்பல வகையான சீர்திருத்த வடிவங்களை அறிமுகப் படுத்திக் கொண்டு, பயன்படுத்தியும் வருவது பெரிதும் வருந்தத்தக்கது.

இந் நிலைகளுக்கெல்லாம் இவர்கள் கூறும் ஒட்டுமொத்தமான ஒரே காரணம் தற்கால அறிவியல் வளர்ச்சிக்குகந்த வகையில், கணினி (கம்ப்யூட்டர்) முதலிய அறிவியல் கருவிகளில் பயன்படுத்துவதற்கேற்ப இவ்வெழுத்துகளின் வரிவடிவம் ஒத்து வரவில்லை என்பதுதான். அறிவியல் அறிவாலும் அதனடிப் படையில் கிடைத்த உயர் பதவிகளாலும் தாம் பெரும் மேதைகளாக வளர்ந்து நிற்பதாகக் கருதிக் கொள்ளும் இவர்கள், வேறு எவருடைய தகவானவும், காரண கருமிய முறையிலும் கூறப்பெறும் கருத்துகளுக்குச் செவிசாய்க்காமல் ஆளுக்கொரு வகையில் பல்வேறு நிலையான வரிவடிவச் சீர்திருத்தங்களையும் வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இந்தச் சூழலில்தான், கனடா நாட்டு. டொரண்டோ மாநிலத்தில், சீவா பதிப்பகத்தை நடத்தும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழன்பர்கள் சிலர், மின்கணினிப் பொறியில் சில பிற மொழி எழுத்துகளுடன் தமிழ் மொழியில் இப்பொழுதுள்ள சீர்திருத்தப் பெறு எழுத்து வடிவங்களையும், சீர்திருத்தம் பெற வேண்டுவனவாக அறிஞர்கள் குறிப்பிடும் சில வடிவங்களையும் ஒப்ப வைத்து ஆய்ந்து,

(1) 'இப்பொழுதுள்ள சீர்திருத்தப் பெறாத தமிழ் எழுத்துகள் கணினி முறைக்கு அனைத்து வகையிலும் பொருந்து வனவாகவே உள்ளன', என்றும்,

(2) 'சீர்திருத்த வேண்டுமென ஒரு சிலர் குறிப்பிடும் புது வரி வடிவங்கள், மிகு முயற்சியையும், மிகுந்த கால அளவையும், மிகுதியான பொருட் செலவையும் எடுத்துக் 'கொள்கின்றன' என்றும்,—கண்டுபிடித்து, இப்பொழுதுள்ள தமிழ் எழுத்து முறையே, இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கும் சரி, இனி எதிர்காலத்தில் வரவிருக்கும் எத்தகைய மாறுதலான அறிவியல் வளர்ச்சிக்கும் சரி, மிகப் பொருந்தியனவாகவும் பொருத்தமானவாகவும்.எளிதே கையாளக் கூடியனவாகவும் இருப்பனவாக முடிவு செய்துள்ளனர்: இதை மெய்ப்பிக்க இப்பொழுதுள்ள தமிழ் வரிவடிவங்களைக் கொண்டே மிகவும் புத்தம் புதுமுறையில் வளர்ச்சி பெற்று வெளிவந்துள்ள கணினிப் பொறியில், பல்வேறு வடிவ அமைப்பில், அழகு ததும்ப ஆறு நூல்களை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர்;

அவற்றுள் ஆறுவது நூல் மிக அண்மையில் வெளி வந்துள்ள 'மின் கணினித் தமிழும் எழுத்துச் சீர்திருத்தமும்' என்னும் நூலாகும். இதற்கு முன் இதே முறையில் கீழ் உள்ள நூல்கள் அச்சிடப் பெற்று வெளிவந்துள்ளன:

(1) தமிழ் எழுத்துறுப்பு இலக்கணம்.

—இது 1976-இலேயே கணினி முறையில் வெளிவந்தது: இக்கால் அழகு முறையிலும் அச்சு முறையிலும் கணினி முறையிலும் மிகத் திருந்திய பதிப்பாக 1988 இல் வெளிவந்துள்ளது.

(2) தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்:

—இது 1981-இல் முதல் பதிப்பாகவும் 1987-இல் மகதத்திருந்திய பதிப்பாகவும் வெளிவந்துள்ளது.

(3) தமிழ் அச்சுக் கலையில் மின் கணினியின் பிரவேசம்,(1986)

(4) எழுத்து நூல் (மரபுச் செய்யுளான விதிகள்) (1989)

(5) மின் கணினிக்குத் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் அவசியமா? (உலகளாவிய இலவச விநியோகம். 1989)

இறுதியாக, ஆறுவதாக, இக்கால் வெளிவந்துள்ள நூலே நாம் முன்னர் குறித்த: மின் கணினித் தமிழும் எழுத்துச் சீர்திருத்தமும் என்னும் அருமையான அறிவியலாக்க வெளியீடாகும்.

(இந் நூல்கள் தமிழ் பிழையாகவும் கலப்புத் தமிழாகவும் வெளிவந்துள்ளதை இங்குக் குறிப்பிடவே வேண்டும். அதுவும் இவற்றுள் கணினி என்னும் சொல்லே கூட கணனி என்று வெளியிடப் பெற்றுள்ளது. இந்நூல் வெளியீட்டாளருக்கும் இங்கும் வேறெங்கும் உள்ள தமிழ் நூல் வெளியீட்டாளர்கள் போல், தூய கலப்பில்லாத் தமிழும், பிழையில்லாத தமிழும் கொள்கையாக இல்லாமையால், இவர்கள் வெளியீடுகள் மொழியளவிலும், இலக்கணவியலளவிலும், கருத்தளவிலும், அறிவியல் அளவிலும் குற்றமுடையன வல்ல என்பதை அன்பர்கள் மனத்தில் கொள்ளுதல் வேண்டும்—என்று கேட்டுக் கொள்கிறோம்.)

இந் நூலில் உள்ள அறிவியல் ஆய்வு முறைகளையும் முடிவுகளையும் தெரிந்து கொள்ளும் முன், இந் நூலில் முதற்சில பக்கங்களில் தெரிவிக்கப் பெற்றுள்ள கருத்துகளையும், உரைகளையும் அன்பர்கள் அறிந்து கொள்வது, இந் நூலின் நோக்கங்களை உணர்ந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

இதில், 2-ஆம் பக்கத்தில், 'ஒரு துளிச் சிந்தனை' என்னும் தலைப்பிட்டு ஒரு பாடலை அச்சிட்டுள்ளனர். அப்பாடல் இது:

தலையணிக்குத் தக்கதாகத் தலைதறித்துத்
தாரணியில் தவிப்பா ருண்டோ?
நிலையான தமிழெழுத்தை நெறிகெடவே
நெளித்தார் புவி நிலைப்ப துண்டோ?
சிலையாகும் மின்கணினி செறிக்காத
எழுத்துண்டோ? சிந்தி யாது
மலைகெல்லி எலிபிடித்த மாவீரர்
மண்டையிலே மண்ணு தானோ?

அடுத்து, அந் நூலின் உள்பகுதியில் அந் நூலைக் 'காணிக்கை' யாக்கியிருக்கிறார்கள், கீழ்வருமாறு:

"எழுத்துச் சீர்திருத்தப் புயல் அழிவினால் சிதைந்து' சீர்குலைந்து போன,

ஞ, ரு, ஞு, ணை, லை, ளை, னை

எனும் ஏழு எழில் தமிழ் எழுத்துகளுக்கும், கசாப்புக் கடைக்குப் போகக் காத்திருக்கும் நிலையில் அழிவுக்குள்ளாகக் காத்திருக்கும் சுருக்க எழுத்து அமைப்புள்ள இகர, ஈகார, உகர, ஊகார உயிர்மெய்யெழுத்துகளான எழுபத்திரண்டு தமிழ் எழுத்துகளுக்கும்.''

இனி, அந் நூலுள் வெளியிட்டுள்ள பதிப்புரை, பதிப்பாசியர் உரை, நூலாசிரியர் உரை, நூலின் உள்ளுரை ஆகியவற்றுள் கூறப்பெற்றிருக்கும் சில, பல முகாமைக் கருத்துகளைக் கூறுவோம்.

(இக் கருத்துரைகள் நல்ல தமிழில் சில இடங்களில் திருத்தப் பெற்றுக் கொடுத்திருப்பதைத் தவிர வேறு மாற்றங்கள் செய்யப் பெறவில்லை.)

''பகலவனைப் புறங்கையால் மறைத்தல் என்று ஒரு மரபுத் தொடர் உண்டு. அப்படி மறைக்கமுடியுமா என்று யாவரும் வியப்படையலாம். ஆனால் அப்படி முழுமையாக மறைக்க முடியாவிட்டாலும் தாம் இருக்கும் இடத்தையாவது அவர்கள் மறைத்துக் கொள்வதுண்டு. அது போலத்தான் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தையும் ஒருசிலர் தமக்காக்கி முடியாத கருமம் ஒன்றை வெட்டிச் சாய்த்து விழுத்தி முடித்ததுபோல் நினைப்பது மட்டுமன்று, தங்களுக்குத் தமிழ் மக்கள் தந்துள்ள சில உரிமைகளின் உதவியுடன் நடைமுறைப் படுத்தியும் விடுகின்றார்கள்.

பண்டு தொட்டு வரும் ஒரு செயலை நன்கு ஆராய்ந்து விரைவுப்படாமல் சீர்தூக்கிய பின்னரே மாற்றுதல் அல்லது நீக்குதல் வேண்டும். அதுவும் தொடக்கத்தில் தற்காலிகமாகவே அதனை அப்படிச் செய்ய வேண்டும். தக்க வகையாக அது சரியற்றதெனக் காணுமிடத்து மாற்றியதைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்தும், அழித்ததைப் பழைய நிலைக்கு உயிர்ப்பித்தும் விட வேண்டியது மாற்றம் விரும்புவோரின் மனச்சான்று நிறைந்த கடமையாகும்.

அதைவிட்டுச் சிலர், 'நோயாளிகள்கூடி மருத்துவரின் கருத்தாய்வுக்குச் செவிகொடாது, தங்களைத் தாங்களே அறுவைப் பண்டுவத்திற்குட்படுத்தி அழித்துக் கொண்டது போல், சரியான கருத்தாய்வின்றித் தமிழ் எழுத்துகளை அழித்துவிட்டார்கள்' என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

அதற்காக அவர்கள் பல ஞாயங்களைச் சொல்கிறார்கள். அவற்றில் ஓரளவு ஞாயம் இருப்பதாக அந் நிலை மற்றவர்களை அஞ்சச் செய்தது. அஞ் ஞாயம், தொகையான எழுத்துகளைக் கொண்ட தமிழ் நெடுங்கணக்கை மின் கணினியிற் புகுத்திவிட முடியாது; ஆதலால் எழுத்துகள் பலவற்றைக் குறைக்க வேண்டும்' என்ற ஞாயந்தான்.

இந்த மின்கணினி அச்சம் தமிழறிஞர் பலரையும் ஆட்டிப் படைத்தது என்பது உண்மைதான். இதனால்தான் அவர்கள் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்திற்கு ஒப்புரை புகன்றூர்கள். மின் கணினியில் தமிழ் எழுத்துகளை நெறிப்படுத்தியும் செயற்படுத்தி-யும் பார்த்துத் தமிழ் எழுத்துகளைப் பயன்படுத்தியவர்களுக்கும் இவ்வகைத் தாழ்வுச் சிக்கல் இருந்து வந்துள்ளது என்பதை நன்கு கருத முடிகின்றது. இதுவரை எழுத்துருக் கருவை நடுவாகக் கொண்டு நாங்கள் ஐந்து நூல்களை வெளியிட்டுள்ளோம். இவ்-வாறு தமிழ் எழுத்துறுப்பு அமைப்பில் அக்கறை கொண்டு பல நூல்களை வெளியிட்டு வரும் எங்களுக்குக்கூட தொடக்கத்தில், தமிழ்மொழி எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய ஓர் அச்சம் இருந்த-துண்டு. அதனால்தான் எங்களின் நூல்களில் எல்லாம் அதனை எதிர்க்க வலுவற்று இருந்தோம். எதிர்ப்பான கருத்துகளுக்-கிடையில் தற்காலிகமான கருத்துகளை அதற்குச் சார்பாக வழங்-கினோம்.

இன்று நாங்கள் தமிழ் எழுத்துகளை மின் கணினியில் நெறிப்-படுத்தி, அச்சுக் கலையில் தொழிற்படுத்தி வெற்றி கண்டுள்ள-படியால், தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் தேவையற்றதொன்-றெனக் கண்டுள்ளோம். இந்த அடிப்படையில் தமிழர்களுக்கு அவ் வுண்மையை வெளிப்படுத்தி மின் கணினித் தமிழ் பற்றிய அச்சத்தைப் போக்க சில உண்மைகளை விண்டுரைக்க வேண்டியது எங்களின் தலையாய கடமை எனக் கருதுகின்றோம்.

ஆதலால்தான் இந்த நூலை நாங்கள் அதிக உழைப்புக்கும் முயற்சிக்குமிடையே வெளியிடுகின்றோம்: பல நூல்கள் சுவைக்கக் கூடியவை; சில உண்ணக்கூடியவை; ஆனால் ஒருசிலவே உண்டு செரிக்கப்பட்டு, உள்ளத்துக்கும் உறுதி தருவன. அவ்வகையில் தமிழன்பர்கள் ஒவ்வொருவரும் இதனைப் படித்து இதில் சொல்-லப்பட்டு உள்ளவற்றை ஆழமாகச் சிந்தித்துக் காரணமின்றி அழிக்கப்பட்டு வரும் தமிழ் எழுத்துகளைக் காத்துப் பேண வேண்டியது அவர்தம் கடமையாகும்.''

—இந் நூலை எழுதியவர் ஆசிரியர் ஈழத்துப் பூராடனார்; துணை-யாசிரியர் நிழற்சந்திரா என்னும் எட்வர்டு சந்திரா. பதிப்-பாசிரியர் அன்பு மணி. இரா. நாகலிங்கம். இந்நூலின் பெயர் 'மின் கணினித் தமிழும் எழுத்துச் சீர்திருத்தமும்!

இது கிடைக்குமிடம் இடம்: Jeeva Publishers Reflex Printing, 1108 Bay Street, Toronto M5S 2W9 ONT Canada. விலை 15 கனடா டாலர்.

இந் நூலை வாங்கிப் படிக்க இயலாதவர்களின் பொருட்டு, இதன் உள்ளுரைக் கருத்தாக்கங்களின் தேவையான சில பகுதிகள் தென்மொழியில் சில தொடர்களாக வெளிவர விருக்கின்றன. அன்பர்கள் அவற்றைப் படித்துப் பயன்பெறுவார்களாக.

(தொடரும்)

பாவேந்தர் நூற்றாண்டு விழாக் குழுவினரின் பார்வைக்கு:

## புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன்

அவர்களின் பெருமைக்குப் 'பெருமை' சேர்க்கும்
'இயல், இசை, நாட்டிய, இனஎழுச்சி நாடகம்'
பெங்களூர்த், ''தன்னுரிமை மனமகிழ் மன்றத்தின்''

# பாவேந்தன் கண்ட தமிழச்சி

---

பேரன்பு கெழுமிய பெருந்தகையீர், வணக்கம்!

இருபதாம் நூற்றாண்டின் ஈடிணையற்ற இனவுரிமைப் பாவலரான ''புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன்'' அவர்களின் ''நூற்றாண்டு விழா'' அடுத்த மாதம் தொடங்குகிறது. இன்னும் ஓராண்டுக் காலத்திற்குச் சிறப்பான முறையில் தமிழ்நாட்டில் பாவேந்தர் நூற்றாண்டுவிழா நடைபெறவிருக்கிறது என்று ''தமிழக அரசு'' அறிவித்திருக்கிறது.

''தந்தை பெரியார் வழியில்'', தமிழர்களின் 'தன்மதிப்புக்கும்' 'தன்னுரிமைக்கும்' 'பெண்ணுரிமைக்கும்' முன்னுரிமை கொடுத்த ''புரட்சிப் பாவேந்தருக்கு'', 'தமிழக அரசும்', தன்மான உணர்வுமிக்க 'தமிழர்நல அமைப்பு'களும், தமிழ்கூறு நல்லுலகெங்கும் ''திருவிழா''வெடுத்துப் பெருமிதம் அடையவிருக்கும் இவ்வினிய சூழலிலே,......—கருநாடகத்தில், தமிழர் இனஎழுச்சிக்கும் தன்மான உணர்ச்சிக்கும் முதன்மை தரும் வகையிலே தொடர்ச்சியாகப் பலவேறு கலைநிகழ்ச்சிகளை நடத்தி வரும் 'கலை—பண்பாட்டு' அமைப்பான ''தன்னுரிமை மனமகிழ் மன்றம்'' பெருமையுடன் உருவாக்கிய ''பாவேந்தன் கண்ட தமிழச்சி'' என்னும் 'இயல், இசை, நாட்டிய—இனஎழுச்சி நாடகத்தைப் பற்றிய குறிப்புகள் ஒரு சிலவற்றைத் தங்களின் சீரிய கவனத்திற்குக் கொண்டுவர விழைகின்றோம்.

### 14 பரிசுகள்

கடந்த, திருவள்ளுவர் 2016 (கி.பி. 1985)-ஆம் ஆண்டு 'பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தில்' நடைபெற்ற ''கலைவிழா நாடகப் போட்டியில்'' கலந்துகொண்டு, அவ்வாண்டின் மிகச் சிறந்த (முதல்) நாடகத்திற்கான ''சங்கரதாசு சுவாமிகள் விருது'', மிகச் சிறந்த 'தமிழ்ப் பண்பாட்டு' நாடகத்திற்கான'' ''நீலகண்டன் சுழற்கேடயம்'', மிகச் சிறந்த 'உரையாடலுக்கான'' ''அவ்வை சண்முகம் விருது'', மிகச் சிறந்த 'மேடை உத்திக்கான'' ''வி. பி. சந்தோசம் சுழற்கேடயம்'' மற்றும் 'சிறந்த இசை', 'சிறந்த ஒப்பனை'. 'சிறந்த நடிப்பு' போன்றவற்றுக்கான பரிசுகள் உட்பட 14 பரிசுகளை வாரிக் குவித்த நாடகம் என்றும் பெருமைக்குரியது ''பாவேந்தன் கண்ட தமிழச்சி''.

### விடுதலைப் புலிகள், சான்றோர்கள் பாராட்டு

அண்மையில் திருப்பத்தூரில், 'இனமான இயக்குநர்' வி. சி. குகநாதன், சுப-வீரபாண்டியன் போன்றோரால் முன்னின்று நடத்

தப்பட்ட ''தமிழர் இனஎழுச்சி மாநாடு'' உட்பட, ஏறத்தாழ 15 அரங்கங்களில் இதுவரை நடத்தப் பெற்றுள்ளது இந்த நாடகம்.

...குறிப்பாக, தி.பி. 2017 (கி.பி. 1986)-ஆம் ஆண்டு, சேலம் மாவட்டத்தில் ''தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின்'' 'பயிற்சிப் பாசறைத் தளபதி-பொன்னம்மான்' அவர்களின் தலைமையில், ஏறக்குறைய 500 விடுதலைப் புலிகள் முன்னிலையில் நடத்தப்பெற்ற பெருமையும் இந்த நாடகத்திற்கு உண்டு.

பெங்களூரிலுள்ள ''பவித்திர மகிள மண்டலி'' என்னும் மகளிர் அமைப்பு, ''ஒனெக்கெ ஒபவ்வா'' என்றும் பெயரில் பாவேந்தன் கண்ட தமிழச்சியைத் தழுவி 'கன்னடத்தில்' நடத்திய நாடகம் கன்னட மக்களின் வரவேற்பைப் பெற்றது.

புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் ஒப்புயர்-வற்ற பாவியமான ''தமிழச்சியின் கத்திக்குப்'' புதுமெருகும், தமீழ்ழ மக்களின் 'தன்னுரிமைப்' போருக்குத் 'தனிமதிப்பும் கொடுத்து உருவாக்கப்பெற்ற இந்த நாடகத்தை, ''பாவலரேறு-பெருஞ்சித்திரனார்'', ''மாவீரன்-நெடுமாறன்'', பெண்ணுரிமை இயக்கத்தைச் சார்ந்த ''சரசுவதி-இராசேந்திரன்'', திருவாட்டி-தாமரை அம்மையார் உள்ளிட்ட தமிழ்ச் சான்றோர் பலரும் பார்த்து மனமுவந்து பாராட்டியுள்ளார்கள்.

பெங்களூர் நகரின் பலவேறு தொழிற்சாலைகளிலும் அலு-வலகங்களிலும் பணிபுரியும் 30-க்கும் மேற்பட்ட பயில்முறையும் கலைஞர்களின் ஒத்துழைப்போடு நடத்தப்பெற்றுவரும் இந்த நாடகத்தைப் ''புரட்சிப் பாவேந்தர் நூற்றாண்டு விழாவினை-யொட்டி, தமிழ்நாட்டின் பலவேறு பகுதிகளிலும் நடத்தித்தர நாங்கள் அணியமாயிருக்கின்றோம். புரட்சிப் பாவேந்தர்பால் ஈடுபாடுகொண்டுள்ள அனைத்துத் தரப்பினரும் எங்கள் நாடகக் குழுவைத் தக்கவாறு பயன் படுத்திக் கொள்ள முன்வருமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம். நன்றி.

புலவர்-மகிபை-பாவிசைக்கோ (நாடக ஆசிரியர்)

அறவாழி (அமைப்பாளர்)

தன்னுரிமை மனமகிழ் மன்றம், அரிமா இல்லம்
96, வரிசை எண் 4-ஆம் தெரு, மக்கான் சாலை குறுக்கு.
பெங்களூர்-560 001.


## "தமிழ்ச்சிட்டு"

ஆண்டுக் கட்டணம் : உருபா 12.00
தனியிதழ் : ,, 1.00

ஓரிதழுக்கு உருபா 2-00 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

'தமிழ்ச்சிட்டு', சென்னை-5

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| 56 | என். பத்மாவதி, ஆசிரியை, ஆம்பூர்பட்டி | 5 |
| 57 | ஆ. மு. சு. செயம், ஆசிரியை. நீர்ப்பழனி | 5 |
| 58 | சி. உரோசாலி, ஆசிரியை, செங்காளக்குடி | 5 |
| 59 | சி. சிவகாம சுந்தரி, ஆசிரியை. மலம்பட்டி | 5 |
| 60 | அ. அடைக்கலமேரி இசுடெல்லா, ஆசிரியை, ஆலூர் | 5 |
| 61 | மா. மகா லக்குமி, ஆசிரியை, அவ்வையார்பட்டி | 5 |
| 62 | அ. தீபராணி, ஆசிரியை, விட்டா நிலைப்பட்டி | 5 |
| 63 | ச. சுகுந்தா, ஆசிரியை, ஆலூர் | 5 |
| 64 | ஆர். விசயா, ஆசிரியை, ஆலூர் | 5 |
| 65 | ச. மரிய பொன்னம்மாள், ஆசிரியை, ஆலூர் | 5 |
| 66 | சி. பழனிச்சாமி, ஆசிரியர், சூரியூர் | 5 |
| 67 | இல. தாமரை, ஆசிரியர், மின்னுத்தூர் | 5 |
| 68 | ம. மூக்கன், சாரவுணவு அமைப்பாளர், அவ்வையார்பட்டி | 5 |
| 69 | ப. சங்கரன், ஆசிரியர், காரப்பட்டு | 5 |
| 70 | அ. சின்னப்பன், ஆசிரியர், விட்டா நிலைப்பட்டி | 5 |
| 71 | ப. முருகேசன், ஆசிரியர், இராசிபுரம் | 5 |
| 72 | எசு. வேலு. தேன்மொழி துணியகம், கீரனூர் | 5 |
| 73 | சு. அரசேந்திரன், ஆசிரியர், சிங்கத்தாக்குறிச்சி | 5 |
| 74 | சி. சண்ணப்பன், ஆசிரியர், மதயானைப்பட்டி | 5 |
| 75 | ம. பசீர். பள்ளித்துணை ஆய்வர். விராலிமலை | 5 |
| 76 | அ. தருமராசன், உதவிக் கல்வி அலுவலர், விராலிமலை | 5 |
| 77 | கோ. பட்டம்மாள், குழந்தைகள் நலப்பணியாளர் அவ்வையார்பட்டி | 2 |
| 78 | அ. மங்கையர்க்கரசி, குழந்தைகள் நலப்பணியாளர் அவ்வையார்பட்டி | 2 |
| 79 | தோ. சூரைப்பிரகாசம், ஆசிரியர், நடுப்பட்டி | 5 |
| 80 | என். மெகராசுபாலு, ஆசிரியை, நடுப்பட்டி | 5 |
| 81 | அ. சோசப், தொழிலாசிரியர்: நடுப்பட்டி | 5 |
| 82 | க. சின்னச்சாமி, சாரவுணவு அமைப்பாளர், நடுப்பட்டி | 5 |
| 83 | ஆ. செகந்நாதன், பேராசிரியர், திருச்சி | 10 |
| 84 | அ. செல்லையன், தொண்டமான்நல்லூர் | 2 |

க. க. ஆறுமுகம் ஆசிரியர் அவிநாசி அவர்கள்
திரட்டி விடுத்த தொகை :

| | | |
|---|---|---|
| 85 | அ. இராமசாமி, தலைமை ஆசிரியர், அவிநாசி | 25 |
| 86 | க. அங்கமுத்து உதவி, அவிநாசி | 25 |
| 87 | ந. தமிழ்வேள், பழங்கரை | 25 |
| 88 | அ. துரைசாமி, தலைமை, அ. வி. பாளையம் | 25 |
| 89 | வே. துரைசாமி தலைமை, பெரியார் காலனி | 25 |
| 90 | க. செ. மல்லையன், உதவி, கருணைப்பாளையம் | 25 |
| 91 | அ. துரைசாமி, உதவி, கைகாட்டிப்புதூர் | 25 |
| 92 | அ. செல்வராசு உதவி, புதுப்பாளையம் | 10 |

| | | |
|---|---|---|
| 93 | முத்துச்சரவணன், அவிநாசி | 10 |
| 94 | கை. கிருட்டிணசாமி. தலைமை, அவிநாசி | 20 |
| 95 | ஆ. செந்தாமரை, அவிநாசி | 10 |
| 96 | ஆ, மலர்விழி, அவிநாசி | 10 |
| 97 | ஆ. தமிழரசி, அவிநாசி | 10 |
| 98 | செ. கனகம், அமைப்பாளர், ஆ. க. பாளையம் | 5 |
| | கூடுதலாக விடுத்த தொகை | 1 |
| 99 | கா. இளமுருகன். புளியம்பட்டி | 50 |
| 100 | இர. இராமசாமி, புளியம் பட்டி | 100 |
| 101 | பொ. பொன்னரசன். உடுமலைப்பேட்டை | 100 |
| 102 | பேரா. சாலை. இளந்திரையன், சென்னை-86 (மூன்றும் முறை-ஏப்பிரல் '90) | 100 |
| 103 | எசு. செல்லப்பா I.A.S. ஐதராபாது | 200 |
| 104 | கீதா உதயகுமார், ஐதராபாது (இரண்டாம் முறை) | 25 |
| 105 | முனைவர் எம். மார்ட்டின், பாண்டிச்சேரி | 100 |
| 106 | வேலா அரசமாணிக்கம், ஈரோடு | 512-50 |
| 107 | வீர. செல்லக்கண்ணு, கோவை | 200 |
| 108 | செயராமன், பொள்ளாச்சி | 100 |
| 109 | இராமசாமி, மதுரை | 10 |
| 110 | ப. சாம்பசிவம், மன்னார்குடி | 25 |
| 111 | இரத்தின மணியம்மாள், தென்காசி | 50 |
| | | 2334.50 |
| | முந்தைய மொத்தம் | 5385.00 |
| | தொகு மொத்தம் | 7719·50 |

தமிழறிஞர் குடும்பத்தைக் காக்கும் தண்டமிழ்ப் பணிக்குத் தோன்றாத் துணையாக நிற்கும் மெய்ம்மைத் தமிழ் நெஞ்சங்களுக்கு எம் நெஞ்சு நிறைந்த வாழ்த்துகளும் நன்றியும் உரியவாகுக!

குறிப்பாக, கீரனூர் ஆசிரியர் கி. பெருமாள் அவர்களும், அவிநாசி ஆசிரியர், க. க. ஆறுமுகம் அவர்களும் நன்கொடை திரட்டி விடுத்தமைக்கு நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

ஆண்டுக் கட்டணம் : உருபா 24.00
அரையாண்டுக் கட்டணம் : ,, 12.00
தனியிதழ் : ,, 2.00

தமிழகம் தங்களை நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது. தங்களை இனங்கண்டு, தங்கள் தலைமையை ஏற்க அணியமாகிக் கொண்டிருக்கின்றது. தாங்கள் வழிகாட்டுதலை ஏற்றுச் செயல்பட அ'து ஆயத்தமாகி விட்டது. இக்கால கட்டம் மிக முகாமையான கட்டம்.

அறிஞர்கள் தங்கள்பின்வர முடிவு செய்து விட்டனர். இளைஞர்கள் தங்கள் கட்டளைக்குச் செயல்படத் துடிக்கின்றனர், மக்களும் தங்களை அணைத்து ஏற்றுப் பின்வரப் போகின்றார்கள். நாம் புதியதொரு தமிழ் இனத்தை உருவாக்கப் போகிறோம். நன்றி வணக்கம். அன்றும் இன்றும் என்றும், தங்கள் மாணவன்,

—பாவலர். இளஞ்சித்திரன், சென்னை-18

○ : *1412:* பேரன்பின் பெட்டகமே! வணக்கம், நலம், நலமுடன் வாழ என் அன்புநெஞ்சின் வாழ்த்துகள். தென்மொழி சுவடி 25 ஓலை 7 கண்டேன் முகப்பில்-பாடலின் தலைப்பில் ''நெஞ்சு புண்ணாகின்றேன்'' என்று குருதி வரியை எழுதியுள்ளீர்கள், உண்மையில், பல்லாண்டுகளாக, எண்ணமும் எழுத்தும், மூச்சும், பேச்சும் தமிழ் தமிழ் என்றே முழங்கி இன்னும் சொன்னால், இறுதி மூச்சுள்ளவரை 'தமிழ் தமிழர் தமிழ்நாடு' அதன் வளர்ச்சி வாழ்வு புகழ் ஒன்றிற்கே, ஓயாமல் ஒழியாமல் எண்ணற்ற இடர்க்-காட்டில், கண்ணற்ற கிளிபோல், இன்னலுற்று வாழாமல்-வாழ்ந்து வருவதை, எண்ணி எண்ணி அரத்தக் கண்ணீர் வடிக்-கின்றேன். உண்மை ஒன்றை என்றும் மறக்காதீர்கள், இந்த நாட்-டில் உள்ள தமிழர்களில் பலர், ஆம், மிகப்பலர் திருடர்கள்; தீயர்-கள்; தீயினும் கொடியர்கள். அன்று புரட்சிப்புலவர் பாடியதில் ஒன்றை மறந்தார். ''தமிழாய்ந்த ''நல்ல'' தமிழ்மகன் (இந்த) தமிழ்நாட்டை ஆளல் வேண்டும்'' என்று எழுத மறந்தார். சொல்லாய்வறிஞர் திரு. அருளியின் திறமையைப் பலமுறை நாடாள்வோர்க்கும் நல்லோர்க்கும் எடுத்து, விளக்கிக் கூறியும், பழம்தின்னும் கிளிகள் போலன்றி, மலம் தின்னும் பன்றிகள் போல்தான் இந்நாட்டு மக்களில் (ஆள்வோர்களையும் சேர்த்தே) பலர் உள்ளனர் என்று குறிப்பிட்டால் குறையில்லை என்றே எண்ணுகின்றேன். 'நெஞ்சு புண்ணாகுதல்' வேண்டாம். அமைதி-கொள்ளுங்கள். பலருக்கு நிழல் தரும் மரம் வெயிலில் வாடத்தான் — மழையில் நனையத்தான் — நீரில்லையென்றால் மடியத்தான் செய்கிறது! மரத்தின் அடியில் நின்ற, நிற்கும், மக்கள், பறவைகள் எல்லோரையும் நன்றி கெட்டவர்கள் என்று எண்ணிடல் வேண்டாம். இதழில் திரு. நலங்கிள்ளி அவர்களின் ''ஆட்டுத் தோல் போர்த்த இந்தி ஓநாய்'' கட்டுரை மாணிக்கம்! திரு. தமிழ்வேந்தன் ''கண்ணாடி நினைவுகள்'' கற்கண்டு! குடும்பத்தார் அச்சக அன்பு நெஞ்சங்கட்கு என் அன்பு வாழ்த்துகள்; வணக்கங்கள். அன்புள்ள —அருள்மணி பெங்களூர்-21

○ : *1413 :* அமைதியும் நட்புணர்வும் உண்டாவதாக! பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய ஐயா! அவர்களுக்கு,... நீண்ட இடைவெளிக்குப்பின் தொடர்பு கொள்கிறேன்.

ஐயா! தங்களுக்கு இம்மாதம் பிறந்தநாள்! பிறந்த நாள் கடந்த நிலையில் உங்களுக்குத் தொலைபேசி செய்தேன். உங்கள் குரலைக் கேட்டதும் மெய் மறந்து என்ன பேசுவது என்று தோன்றாமல் இலக்கை விட்டு விட்டு-வேறு ஏதேதோ பேசினேன். இருக்கட்டும், நான் இம்மடலை எழுதும் வரையிலும் அமைதி இல்லை. தொலைபேசி செய்து வாழ்த்துக் கூறவில்லையே என மனம் மிகத்துயரப்பட்டது. ஐயா! நலமாக இருக்கிறீர்களா? ஐயா! தாங்கள் கூட்டங்களில் கலந்துக் கொள்வது—பேச்சின் சாரங்கள் என்றுசெய்தி அடிக்கடி வெளியாகிறது. இப்படிச் செயல்படுவது

மிகமகிழ்ச்சி அளிக்கிறது; அதைவிட செய்தி மக்களுக்குப் பரவலாகச் சென்று அடைகிறது என்பதில் பெருமகிழ்ச்சி,

ஐயா! தங்கள் ஒளிப்படம் (Photo), செய்திகள் தாளிகை மற்றும் இதழ்களில் காணும் பொழுது செய்தித்துறையில் இறுக்கம் தளர்வாக இருப்பதாகக் கருதுகிறேன்; மேலும் தங்களின் செயல்பாடுகளும் கூடி இருப்பதாக உணர்கிறேன்; தாங்கள் தொல்லைப்படுவது மனத்துக்கு வருத்தத்தையே அளிக்கிறது; உடல் நலத்தை நன்கு பேணிக் கொள்ளுங்கள்; ஐயா!

"துக்ளக்" போன்ற இதழ்களும் தங்களின் வண்ண ஒளிப்படத்தைப் போட்டு அதற்கெனத் தனிச் செய்தி கட்டுரை வெளியிடும் அளவுக்கு நம் நிலை அவர்களை அச்சமுறச் செய்து இருக்கிறது; நடுங்கச் செய்து இருக்கிறது என்றால் தங்களின் உழைப்பின் தீவிரத்தை, கடினத்தை உணர்கிறேன்; பொழிலன் அவர்களைப் பற்றித் 'தினமணி' மற்றும் 'ஜூனியர் விகடன்' போன்ற தாளிகை இதழ்கள் மூலமாக அறிந்தேன்;

ஐயா! இங்கு இன முரண்பாடு உள்ளது? அதை வைத்து எளிதாகப் பேச முடிகிறது. மொழி, மதம், ஆகியன குறுக்கே இருக்கின்றன. இங்கு இந்துக்கள் என்பார் (தமிழர்கள்) ஒரு புறமும் முசுலீம்கள் ஒரு புறமும் இரு பெரும் பிரிவுகளாக உள்ளனர்; வேற்றுமை உள்ளது. முஸ்லீம்கள் இந்துக்களை 'ஐ ஆர் எட்டு' (I R 8) என்று அடைமொழி இட்டுக் கூப்பிடும் அளவிற்கு வேற்றுமை இருக்கிறது; (ஆனால் அதிகமாக இல்லை. நன்கு இயல்பாய்ப் பேசுகிறார்கள்; பழகுகிறார்கள். என்றாலும் இசுலாமியர்கள் பேசும் பொழுது இப்படிக் குறிப்பிட்டே பேசுகிறார்கள்) இந்நிலை மனத்தை வருத்தமுறச் செய்தாலும் கண்கூடான உண்மை இதுதான்! மற்றபடி எல்லாரும் இந்தி வேண்டும் என்றும் இல்லை என்றால் இங்கு வந்து பிழைக்க முடியுமா என்றும் (இங்கு அரபிகள் இந்திக் காரர்களை விட நன்றாக பேசுகிறார்கள் என்றால் மிகையில்லை;)- கூறும் அவர்கள், நாம் தமிழர்கள் என்று அனைவரையும் உணர வைத்து இருக்கிறார்கள்; அப்படிக் கூறுகிறார்கள் என்றால் அதற்கு மலையாளிகள்தாம் காரணம்;

இங்கு எங்கு நோக்கினாலும் மலையாளிதாம்; இங்கு தமிழர்களுக்கு எதிரி மலையாளிகள் தாம். அந்த வகையில் நாம் தமிழர்கள் என்று உணரத் தொடங்கி இருக்கிறார்கள்; இளைஞர்கள் வீடுகளிலும் பெரியவர்கள் கடைத் தெருக்களிலும் சுமைதூக்குகிற கூலிகளாக உள்ளனர்; வெகு சிலரே அலுவலகங்களில் பணியாற்றுகிறார்கள்; அதுவும் மலையாளிகளைச் சரிகட்டிச்செல்ல வேண்டிய நிலையில், அவர்களுக்குக் கீழாக;

நாம் பெருமைப்படக்கூடியது என்று உண்டு என்றால், தமிழர்கள் கடுமையான உழைப்பாளிகள், நேர்மையானவர்கள் என்று பெயர் எடுத்து இருப்பதுதான்; (மலையாளிகள் ஏமாற்றுக்காரர்கள், பொய்யர்கள், புரட்டர்கள் என்று பெயரெடுத்ததற்கு மாறாக), மற்றபடி உலகளாவிய சிக்கல்களும், அவற்றின் தாக்கங்களும் இங்கும் உணர முடிகின்றன;

இலங்கை, பிலிப்பைன்சு போன்ற புரட்சி, போராட்டங்கள் நடைபெறும் இடங்களிலிருந்து எப்படியோ வரும் நபர்கள் குறைந்த ஊதியத்தில் பணி புரிய வேண்டி இருக்கிறது; தவறான வழிகளில் செல்ல வேண்டி உள்ளது; அவ் வகையில் பெரும்-

(தொடர்ச்சி உள்ளே 8-ஆம் பக்கம்)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)